வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 02.08.2025 சனிக்கிழமை | இதழ் : 214 | பக்கங்கள் : 12




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# இலங்கைக்கு விதித்த வரியை 20 வீதமாக குறைத்தது அமெ.!

## அரசின் இராஜதந்திர முயற்சி வெற்றி

கொழும்பு, ஓகஸ்ட் 02

**இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட வரியை 20 வீதமாகக் குறைப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நடவடிக்கை எடுத்துள்ளார்.**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பல உலக நாடுகளை இலக்கு வைத்து புதிய வர்த்தக வரிகளை அறிவித்திருந்தார். குறித்த வரி விதிப்பு நேற்று முதல் அமுலுக்கு வந்த நிலையில் சில நாடுகளுக்கு புதிய வர்த்தக வரி விதிப்புக்களை அறிவித்துள்ளார்.

இதற்கமைய இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 20 வீத வரி விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 44 வீத வர்த்தக வரி விதிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து இலங்கை முன்னெடுத்த இராஜதந்திர முயற்சிகளால் அது 30 வீதமாகக் குறைக்கப்பட்டது.

அதன்பின்னரும் வரியை குறைத்துக் கொள்வதற்குரிய பேச்சுகள் தொடர்ந்தன. இந் நிலையிலேயே தற்போது 20 வீதமாக வரி குறைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் வரி விதிப்பு அமுலுக்கு வரவுள்ளது. (அ)

# விரும்பிய இலக்கை அடைந்தது இலங்கை

## வரி குறைப்பு குறித்து நிதி அமைச்சு செயலர்

கொழும்பு, ஓக. 03

அமெரிக்காவுடனான வர்த்தக பேச்சுவார்த்தைகளில் இலங்கை தனது விரும்பிய இலக்குகளை அடைந்துள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் வைத்தியர் ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா வரிகளை 20 வீதகக் குறைப்பது குறித்து நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில்

11

# அமெரிக்க வரி குறைப்பை பாராட்டும் ஹர்ஷ டி சில்வா!

கொழும்பு, ஓக. 02

இலங்கை ஏற்றுமதிகள் மீதான அமெரிக்காவின் 20 வீத வரி குறைப்பை எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா வரவேற்றுள்ளார்.

இது தொடர்பில் சமூக ஊடகங்களில் அவர் வெளியிட்ட அறிக்கையில்-

11

# அரியாலை மனித புதைகுழியை 4ஆம் திகதி பார்வையிடும் மனித உரிமை ஆணைக்குழு

- பு.கஜிந்தன் -

கொழும்பு, ஓக. 02

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நாளை மறுதினம் 04 ஆம் திகதி யாழ்ப்பாணம் அரியாலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி பிரதேசத்தை பார்வையிடுவதற்கு தீர்மானித்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மூன்று ஆணையாளர்கள் மற்றும் இரண்டு பணிப்பாளர்களுடன் யாழ்ப்பாண பிராந்திய அலுவலர்கள் அடங்கிய குழுவினர் குறித்த பிரதேசத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த குழுவினர் அரியாலை மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தரப்பினருடனும் கலந்துரையாடல்களை மேற் கொள்ளவுள்ளனர் எனவும்

11

# ஜெனிவாவுக்கு செல்லும் கடிதத்தில் தமிழரசுக்கட்சி கையொப்பம் இடும்

## கஜேந்திரகுமார் எம்.பி. நம்பிக்கை

கொழும்பு, ஓக. 02

ஜெனிவா அமர்வில் இலங்கையின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதை வலியுறுத்தி உருவாக்கப்பட்டுள்ள கடிதத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி கையொப்பமிடுமென எதிர்பார்ப்பதாகத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

எனினும், கடிதத்தின் இறுதி வடிவத்தில்

11

# சஜித்தும் பாராட்டு

கொழும்பு,ஓக. 02

இலங்கை மீது அமெரிக்கா விதித்த திருத்தப்பட்ட மற்றும் குறைக்கப்பட்ட 20% பரஸ்பர கட்டண விகிதத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராட்டியுள்ளார்.

11

# சித்துப்பாத்தி மனித புதைகுழியில் நேற்றும் 4 எலும்புக் கூட்டு தொகுதிகள் அடையாளம்!

பு.கஜிந்தன், த.பிரதீபன்

யாழ்ப்பாணம், ஓக. 02

அரியாலை சித்துப்பாத்தி மயான பகுதியில் உள்ள இரண்டு மனித புதைகுழிகளில் இருந்தும் நேற்றைய தினம் புதிதாக 04 எலும்பு கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் நிலையில் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூட்டு

11



# சர்வதேச நிபுணத்துவக் கண்காணிப்பு அரியாலை அகழ்வின்போது அவசியம்!

## சிறீதரன் எம்.பி வலியுறுத்து

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 02

தமிழினப் படுகொலையை ஆதாரபூர்வமாக காண்பிப்பதற்கான சாட்சியமாக வெளிப்பட்டிருக்கும் அரியாலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகளில் சர்வதேச நிபுணத்துவக் கண்காணிப்பு அவசியமானது என்பதுடன், ஸ்கானிங் இயந்திரம் உள்ளிட்ட நவீன தொழில்நுட்ப உபகரணங்களின் உதவியோடு அப்பகுதியில் முழுமையான அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என நாடாளு மன்ற உறுப் பினரும், இலங்கைத் தமிழ்

11

# அரியாலை சான்றுப்பொருள்களை அடையாளம் காண்பதற்கு ஏற்பாடு

பு.கஜிந்தன், த.பிரதீபன்

யாழ்ப்பாணம், ஓக.02

அரியாலை மனித புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட சான்று பொருட்களை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அடையாளம் காண உதவும் வகையில் அவற்றை காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குற்ற புலனாய்வுப் பிரிவின் மனித கொலை விசாரணைப் பிரிவின் நிலைய பொறுப்பதிகாரி யாழ்.நீதவான் நீதிமன்றில் செய்த விண்ணப்பபத்தின் பிரகாரம் சான்றுப் பொருட்களை காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 01.30 மணி முதல் மாலை 05 மணி வரை அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மக்களின் பார்வைக்காக சான்று பொருட்கள் வைக்கப்படவுள்ளன.

11

# சமஷ்டி கோரிக்கையை முன்வைத்து கிளிநொச்சியில் 100 நாள் போராட்டம்

கிளிநொச்சி, ஓக. 02

சமஷ்டி கோரிக்கையை முன்வைத்து வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு முன்னெடுத்துள்ள 100 நாள் போராட்டம் கிளிநொச்சியில் ஆரம்பமானது.

இச்செயற்திட்டத்தின் முதல் நாளான நேற்று காலை 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய பஸ் நிலையத்திற்கு முன்பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி “அடையாளப் படுத்தப்பட்ட 100 நாள் செயல்முனைவு“ என்ற அடிப்படையில் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு, மாகாணத்திற்குள் மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வினை முன்வைத்து தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்திருந்தது.

அதன் தொடர்ச்சியாக நேற்று முதல் நவம்பர் மாதம் 8ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 100 நாட்களுக்கு சுழற்சி முறையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களிலும் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி புதைகுழி குறித்து சர்வதேச விசாரணை தேவை

## ஆறு திருமுருகன் வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஒக. 02

செம்மணி புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் உலகை திரும்பிப் பார்க்க வைத்திருக்கின்றது. இந்த விசாரணை ஒரு சர்வதேச விசாரணையாகி எம் மண்ணில் நடைபெற்ற போர் குற்றங்கள் தொடர்பாக தீர்க்கமான ஒரு நிலைப்பாட்டுக்கு உலகம் வர வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் ஆறு திருமுருகன் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழி தொடர்பாக தமிழ் சமூகம் அதிர்ச்சியில் உறைந்திருக்கின்றது. சித்துபாத்தி இந்து மயானத்தில் நூற்றுக்கு மேற்பட்ட மனித எலும்புகள், எலும்புக்கூடுகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன. எத்தனை பேரை இழந்து எத்தனை பேர் காணாமல்போன சூழலில் கவலையோடு இருக்கின்றபோது இந்த புதைகுழி அதிர்ச்சியையும் மிகுந்த துயரத்தையும் தந்திருக்கின்றது. எனவே இந்த செம்மணி புதைகுழி விவகாரம் தொடர்பாக நீதியான விசாரணை வேண்டும். சர்வதேச ரீதியாக விசாரணை இடம்பெற வேண்டும். ஒரு உண்மையான தீர்வு இந்த விடயத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

இன்று இந்த முயற்சியில் ஈடுபடுகின்ற நீதித்துறை சார்ந்தவர்களை நாம் நன்றியோடு போற்றுகின்ற அதே வேளையில் இந்த விசாரணை தொடர வேண்டும். இந்த விசாரணை ஊடாக தமிழினத்துக்கு நடைபெற்ற கொடுமை ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

செம்மணி புதைகுழி தொடர்பாக பச்சிளம் பாலகர் தொடக்கம் பெண்கள், ஆண்கள் என்று வேறுபாடு இன்றி இவ்வளவு கொடூரமாக புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி உலகத்தை உலுக்கிக் கொண்டிருக்கிறது. தமிழர்களை வியப்புக்குள்ளாக்கி இருக்கிறது. எனவே இரக்கமில்லாமல் நடைபெற்ற - யாராலும் மன்னிக்க முடியாத இந்த துயரமான சம்பவத்துக்கு இலங்கையில் வாழுகின்ற அத்தனை ஈர நெஞ்சுடைய மனிதநேய அமைப்புகளும் சமய பண்பு மிக்க பெரியோர்களும் நேர்மையாக குரல் கொடுத்து சரியான ஒரு தீர்வை இந்த செம்மணி விவகாரம் தொடர்பில் பெற்று தர வேண்டும் என்று இந்த வேளையிலே அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பில் பொது வேண்டுதலை விடுகின்றேன்.

போர் முடிந்தும் எமது சமூகம் இன்றும் துன்ப நிலையில் தான் தொடர்ந்து கொண்டிருக்கிறது. காணாமல்போனோரின் தாய்மார்கள் எந்த நாளும் கண்ணீர் வடிப்பதும், வருகின்ற போகின்ற வெளிநாட்டு தூதுவர்களுக்கு பின்னால் கெஞ்சி மன்றாடி ஓடி திரிந்து அழுவதும் அவர்களையும் ஒரு காட்சிப் பொருட்களாக மற்றவர்கள் கண்டுவிட்டு போவதும் தொடர்ந்து கொண்டிருக்கிறதே ஒழிய தீர்வு வருவதாக இல்லை.

எனவே மிகப் பெரிய அத்தாட்சியாக அமைந்திருக்கின்ற செம்மணி புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட இந்த மனித எச்சங்கள் உலகை திரும்பி பார்க்க வைத்திருக்கின்றது. இந்த விசாரணை ஒரு சர்வதேச விசாரணையாகி எம் மண்ணில் நடைபெற்ற போர் குற்றங்கள் தொடர்பாக தீர்க்கமான ஒரு நிலைப்பாட்டிற்கு உலகம் வர வேண்டும் என்று இந்த வேளையிலே மீண்டும் வலியுறுத்துகிறேன் - என்றார். (அ)

# களமோட்டை வயல்களுக்கு செல்வதற்கு பாலம் இல்லை

## சிரமத்தில் விவசாயிகள்

முல்லைத்தீவு, ஒக. 02

முல்லைத்தீவு - முள்ளியவளை கமநலசேவை நிலைய பிரிவிற்குட்பட்ட மதவளசிங்கன் குளம் நீர்ப்பாசனக்குளத்தின் கீழுள்ள களமோட்டை வயல்பகுதிக்கு ஆற்றைக் கடந்துசெல்வதற்கு பாலம் இன்மையால் விவசாயிகள் பெரும் இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் அப்பகுதி விவசாயிகள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கு இது தொடர்பில் தெரியப்படுத்திய தையடுத்து, பாராளுமன்ற உறுப்பினர் குறித்த பகுதிக்கு நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டதுடன், குறித்த பாலத்தை நிர்மாணிப்பது தொடர்பில் கவனம் செலுத்துவதாகத் தெரிவித்துள்ளார்.

களமோட்டைப்பகுதியில் 220ஏக்கர் வயல்நிலங்களில் பெரும்போகம் மற்றும் சிறுபோக நெற்பயிற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

களமோட்டை வயல்பகுதிக்குச் செல்லும் வழியின் குறுக்கே உள்ள ஆற்றைக் கடந்துசெல்வதற்கு பாலமொன்று இன்மையால் நெற்பயிற்செய்கைக் காலத்தில் நிலப் பண்படுத்தலுக்கு உழவியந்திரத்தை கொண்டுசெல்லுதல், விவசாய உள்ளீடுகளை எடுத்துச்செல்லுதல், விவசாய நிலங்களுக்கான காவலுக்குச் செல்லுதல், அறுவடைக்காலத்தில் அறுவடை இயந்திரத்தைக் கொண்டுசெல்வது, அறுவடையை எடுத்துச்செல்வது உள்ளிட்ட பல சந்தர்ப்பங்களில் விவசாயிகள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை சில சந்தர்ப்பங்களில் 35 அடி தூரமான ஆற்றைக் கடப்பதற்குப் பதிலாக 15 கிலோமீற்றர் சுற்றியே தமது விவசாய நிலங்களுக்கு செல்லவேண்டிய அவல நிலையை களமோட்டைப் பகுதி விவசாயிகள் எதிர்நோக்கியுள்ளனர்.

இந்நிலையில் விவசாயிகளின் கோரிக்கைக்கமைய நிலமைகளை நேரில்சென்று பார்வையிட்ட வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், குறித்த ஆற்றுப் பாலத்தை அமைப்பது தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப் படுமெனத் தெரிவித்தார். (அ)

# நல்லூர் கந்தன் ஆலய வளாகத்துக்குள் பாதணியுடன் சென்ற பொலிஸ் அதிகாரி!



யாழ்ப்பாணம், ஒக. 02

வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தன் ஆலய பெருந் திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் நேற்று காலை பொலிஸ் அதிகாரி ஒருவர் காலணியுடன் ஆலய வளாகத்தினுள் நடமாடியதை அவதானிக்க முடிந்தது. இது குறித்து ஆலயத் தரப்பினர் ஏன் மௌனம் காக்கின்றனர் என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பக்தர்கள் அங்கப் பிரதிஷ்டை செய்வதனால் குறித்த பகுதிக்குள் காலணியுடன் நுழைவதற்கு அனுமதி கிடையாது. மேலும் வெளிநாட்டு தூதுவர்களோ, அமைச்சர்களோ, உயர் அதிகாரிகளோ வந்தால் கூட உரிய முறைப்படி காலணிகளை அதற்குரிய இடங்களில் கழற்றிவிட்டுத்தான் ஆலய வளாகத்தினுள் நுழைவது வழமை.

இவ்வாறான சூழ்நிலையில் குறித்த பொலிஸ் அதிகாரி காலணியுடன் உள்ளே நுழைந்தமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ-05)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று...!

யாழ்ப்பாணம், ஒக. 02

இலங்கை இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று மாலை 6.45 மணி தொடக்கம் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில், வீணை இசையை அநுராகம் கவின்கலை நிலைய மாணவர்கள் வழங்குவர். இவர்களுடன், மிருதங்கம் - சங்கவன் லோகேஷ்வரசர்மா, தபேலா மாதங்கன் லோகேஷ்வர சர்மா ஆகியோர் இசைப்பர்.

இசையரங்கு நிகழ்ச்சியில் திருமதி சிவானுஜா அகிலனின் பாட்டு, பத்மநாதன் சியாம் கிருஷ்ணாவின் வயலின், ஞான வேல் வசந்தின் மிருதங்கம், புவனேஸ்வரன் வேணுகாந்தனின் கெஞ்சிரா என்பன இடம் பெறும். (ஐ)

# கலாரசனா சங்கமம் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக. 02

புலம்பெயர் நாடுகளிலும் தாய் நாட்டிலும் புதிய தலைமுறையின் கலை ஆளுமை சங்கமிக்கும் கலாரசனா - சங்கமம் கோடை நிகழ்வு திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

இதில், நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு இசையரங்கு நிகழ்ச்சியில் இசைச்சாகரம் மாணிக்கம் யோகேஸ்வரன் (ஜேர்மனி) குரலிசை வழங்குவார். மிருதங்கம் ஞானவேல் வசந், வயலின் பத்மநாதன் சியாம்கிருஷ்ணா, கெஞ்சிரா விமலசிங்கம் ராகவன் ஆகியோர் அணி செய் கலைஞர்களாக பங்கேற்பர். தொடர்ந்து, மிதுனன் ரவீந்திரன் (கனடா) "பாரம்பரியம்" நடனம் அரங்கேறும். (ஐ)

# வவுனியாவில் சட்டவிரோதமாக வனப்பகுதி துப்புரவு செய்த குற்றச்சாட்டில் இருவர் கைது

வவுனியா, ஒக. 02

வவுனியா - நெடுங்கேணி தண்டுவான் பகுதியில் சட்டவிரோதமாக வனப்பகுதியைத் துப்புரவு செய்த குற்றச்சாட்டில் இரண்டு பேர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும், மாங்குளம் வனவளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த 23 மற்றும் 40 வயதான இருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# வவுனியா மாநகர சபை அமர்வின்போது ஊடகவியலாளர்களை விமர்சித்த முதல்வர்

வவுனியா, ஒக. 02

வவுனியா மாநகரசபை அமர்வில் உறுப்பினர்களை இருத்தி வைத்து ஊடகவியலாளர்களை விமர்சித்து முதல்வர் சு.காண்டீபன் நேரத்தை வீண் விரயம் செய்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

வவுனியா மாநகரசபையின் அமர்வு நேற்று முன் தினம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்ற நிலையில் அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் பிற்பகல் 2 மணியுடன் சென்ற பின்னர் சபை உறுப்பினர்களிடம் முதல்வர் குறிப்பிடுகையில் -

எனக்கு வாக்களிக்காதவர்களை நீ பழிவாங்கிறாயா என என்னிடம் பலர் கேட்கிறார்கள். நான் ஒரு நாளும் ஆட்சி அமைப்பதற்காக இதில் உள்ள வர்களுடனோ அல்லது கட்சிகளிடமோ ஆதரவு கேட்டு கதைக்கவில்லை. ஒரு நாளும் கேட்டதில்லை.

ஆனால் என் சார்பானவர்கள் மற்ற 10 பேரிடமும் அவர்கள் சார்ந்தவர்களிடமும் கேட்டார்கள். நான் அரசியல் பழி வாங்கல் செய்யவேண்டிய அவசியமில்லை.

ஊடகங்களில் கதைக்கும் போது கவனமாக கதைக்க வேண்டும். ஊடக சந்திப்பு யார் வைப்பதாக இருந்தாலும் என்னைக் கூப்பிடுங்கள். நான் பக்கத்தில் இருப்பேன்.

நான் மக்களுக்கு சேவை யாற்றவேண்டும். ஊடகங்களுக்கு பதில் கருத்து சொல்லித் துக் கொண்டு நேரத்தை வீண் விரயம் செய்ய முடியாது. ஊடக சந்திப்பு வைப்பதாக இருந்தால் வைப்பவருக்கு பக்கத்தில் நானும் வந்து இருந்து அதற்கு பதில் கூறிவிட்டு போவேன்.

என்னையும் ஊடக சந்திப்புக்கு அழையுங்கள். ஊடகம் முன் போய் நீங்கள் எங்களைப் பற்றி கதைக்கிறது என்றால் எங்களை கூப்பிட்டு வைத்து கதையுங்கள்.

வவுனியாவில் சுயாதீனமான ஊடகவியலாளர்கள் கொஞ்சப் பேர் தான் உள்ளனர். விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் தான் உள்ளார்கள். பக்கச் சார்பாக இருப்பதால் மக்களை குழப்புற விதமான செயற்பாடுகளை செய்யாதீர்கள்.

உங்களை இப்படி கதையுங்கள் என்று கூறிவிட்டு எடுக்கும் ஊடகவியலாளரும் உள்ளனர். அப்படி தான் சில சம்பவங்கள் நடந்துள்ளன.-என்றார். (அ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
02.08.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அமெரிக்க வரிக்குறைப்பில் வெற்றி

அமெரிக்காவின் 30 வீதமான வரி விதிப்பு, தற்போது 20 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அரசாங்கத்துடனான தொடர் இராஜதந்திர உரையாடல்களைத் தொடர்ந்து ட்ரம்ப் நிர்வாகம் வரிக்குறைப்புக்கு இணங்கியிருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பொறுத்தவரையில் இது ஒரு வெற்றியாகும். ஆனாலும், இதனால் பொருளாதார சவால்கள் முற்றிலும் இல்லாமல் போய்விடப் போவதில்லை என்னும் கருத்தும் இருக்கின்றது எனினும் இதற்கப்பால் வரியை குறைப்பது சாத்தியமான விடயமுமல்ல என்றே நோக்கப்படுகின்றது.

ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம், வரி விதிப்பு தொடர்பில் கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. அயல் நாடான கனடாவுக்குக் கூட சலுகை வழங்கவில்லை. ஆனாலும், இலங்கைக்கு சிறிய சலுகை வழங்கியிருக்கின்றது. இவ்வாறான சலுகை மனித நேய அடிப்படையில் இடம்பெற்றது என்று கணித்தால் அது தவறானது. உலக அரசியல் முடிவுகள் ஒருபோதும் மனித நேயத்தின் அடிப்படையில் எடுக்கப்படுவதில்லை. அப்படிச் சிந்தித்தால் அமெரிக்கா பல நாடுகள் மீது மனித நேயப் பார்வையைக் காண்பிக்க வேண்டும். ஆனால் சீன - அமெரிக்க உலகளாவிய அதிகாரப் போட்டியில் அவ்வாறான பார்வைக்கு இடமில்லை.

ஆரம்ப பேச்சுவார்த்தைகளின் போது சீனாவுடனான வர்த்தக தொடர்புகள் குறித்து அமெரிக்க அதிகாரிகள் சுட்டிக் காட்டியதாகவும், ஆனால் அதற்கு தங்களின் நடுநிலை வெளிவிவகாரக் கொள்கையை காரணம் காண்பித்து மறுத்துவிட்டதாகவும் ஒரு தகவலை அரசாங்கம் கசியவிட்டிருந்தது. ஆனால், இவ்வாறு கசியவிடப்படும் தகவல்கள் எல்லாம் உண்மைகளாக இருக்கவேண்டும் என்பதில்லை. 30 வீதமான வரிவிதிப்பு, 20 வீதமாக குறைகின்றது என்றால் நிச்சயம் சில விடயங்களில் இணக்கம் காணப்பட்டிருக்கும். இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு இணங்குவதைத் தவிர வேறு வழியுமில்லை.

ஆனால், அநுரகுமார அரசாங்கத்தினால் முடியாது - அவர்களுக்கு இராஜதந்திரம் தெரியாது - அண்மையில் அவர்களது ஆங்கிலப் புலமை தொடர்பில் கூட எதிரணியினர் கிண்டல் செய்திருந்தனர். ஆனால், அமெரிக்க வரிக் குறைப்பில் வெற்றிபெற்றதன் மூலம், பலரது வாயை அடைக்கும் விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெற்றிபெற்றிருக்கின்றது.

ஆனால், இதன்மூலம் மறைமுகமாக வெளிப்படும் ஒரு செய்தி இருக்கின்றது. பழைய ஜே.வி.பியா அவர்களும் இல்லை. அதே வேளை, அவர்களை மற்றவர்களும் அவ்வாறு நோக்கவும் இல்லை. - இந்த நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பலவீனப்படுத்த வேண்டும் என்று எந்தவொரு வெளித்தரப்பும் தற்போது விரும்பவில்லை. இதன் காரணமாகவே அவர்களுக்கு மறைமுகமாக ஆதரவளிக்கின்றனர். உண்மையில் அமெரிக்கா ஆரம்பத்தில் விதித்தது போன்று 44 வீதமான வரிவிதிப்பில் உறுதியாக இருந்திருந்தால் இலங்கை பெரும் நெருக்கடியை சந்திதிருக்கும் - அதனால் அரசாங்கம் வீழ்ச்சியை சந்தித்திருப்பதற்கான அதிக வாய்ப்புண்டு. ஆனால் அரசாங்கம் வீழ்ச்சியடை வேண்டும் என்று இப்போது யாரும் விரும்பவில்லை என்பது வெள்ளிடை மலை.

இந்த விடயத்தை தமிழர் தரப்புக்கள் கவனமாக உற்று நோக்க வேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடனும் பேசுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தவேண்டும். அரசாங்கத்தை தீண்டத்தகாத ஒன்றாக நோக்கிக் கொண்டு விடயங்களை முன்னோக்கி கொண்டு செல்லமுடியாது. ஏனெனில் அதற்கான வெளியாரின் ஆதரவு சிறிதும் இல்லை மிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருக்கின்ற போது அவ்வாறான நிலைமை காணப்பட்டது.

# கிளிநொச்சியில் யானை - மனித மோதலை தடுப்பதற்கான விசேட கலந்துரையாடல்!

கிளிநொச்சி, ஒக. 02

கிளிநொச்சி மாவட்டத்தில் யானை - மனித மோதலைத் தடுப்பதற்கான முகாமைத்துவ குழுவினை அமைத்தல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று காலை 9.30மணிக்கு நடைபெற்றது.

இலங்கை முழுவதும் அதிகரித்து வரும் யானை- மனித மோதல்களால் ஏற்படும் நெருக்கடிகளை தீர்ப்பதற்கான துரிதமானதும் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டது மான நடவடிக்கைகளின் முக்கியத்துவம் பெரிதும் வலியுறுத்தப்படுவதனால், யானை - மனித மோதல்களை முகாமை செய்வதற்கும் அவற்றுக்கான நிரந்தர தீர்வுகளை வழங்குவதற்குமாக மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் உத்தியோகத்தர் குழுவொன்றினை அமைக்குமாறு ஜனாதிபதி செயலகத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் அவர்களின் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகாரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் காட்டு யானைகள் - மனித மோதல் அதிகளவில் காணப்படுகின்றது.

இதன்போது மாவட்டத்தில் நிலவும் யானை - மனித மோதலை தவிர்ப்பதற்கான உபாயமுறைகள் குறித்து முகாமைத்துவ குழுவில் கலந்துரையாடப்பட்டது.

யானை - மனித மோதல்கள் உள்ள பகுதிகளில் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளின் பங்குபற்றலுடன் பிரதேச செயலர் தலைமையில் விசேட கலந்துரையாடல்களை நடத்தி தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் குழுக்களை நியமித்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதற்காக இரணைமடு, அக்கராயன், கல்மடு, பூநகரி ஆகிய பிர தேசங்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளன.

மேலும் புதிய யானை வேலிகளை அமைத்தல், விழிப்புணர்வு நடடிக்கைகள், கண்காணிப்பு நடவடிக்கைகள் போன்ற பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர்கள், இராணுவ பொலிஸ் அதிகாரிகள், பூநகரி பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர், வனஜீவராசிகள் திணைக்களத்தின் பிராந்திய உதவிப் பணிப்பாளர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர், வனஜீவராசிகள் வலயங்களின் உத்தியோகத்தர்கள், துறைசார் திணைக்கள உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

(அ)

## நல்லை ஆதீனத்தில் தெய்வீகக் கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஒக. 02

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் கடந்த 29 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தொடக்கம் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 10 மணிக்கு 'தெய்வீகக் கலை அர்ச்சனை' நிகழ்வு இடம்பெறவுள்ளது. அந்த வகையில் இன்று சனிக்கிழமை இணுவையூர் சிவ. தணிகாசலம் பஜனைக் குழுவினரின் திருப்புகழ் பஜனை நிகழ்வும் , கலாவித்தகர் பரமேஸ்வரன் கௌரீசனின் இசைக்கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் கலத்து கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார்.

(அ)

## முன்பள்ளிச் சிறார்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம்!



யாழ்ப்பாணம், ஒக. 02


முன்பள்ளி சிறார்களுக்கு 65 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு மூலம் சத்துணவு வழங்கும் திட்டம் மானிப்பாய் பிரதேச சபையால் அண்மையில் ஆரம்பிக்கப் பட்டது.

இதன் ஓர் அங்கமாக மானிப்பாய் மேற்கு அரும்புகள் முன்பள்ளி சத்துணவுத் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று வெள்ளிக் கிழமை காலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வட்டார மக்கள் பிரதிநிதி கலொக் கணநாதன் உஷாந்தன், பிரதேச சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரேம்குமார் ஆகியோர் கலந்துகொண்டு முன்பள்ளி சிறார்களுக்கு சத்துணவை வழங்கி ஆரம்பித்து வைத்தனர்.

(அ-5)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**இடபம்**
எதிர்பாராத பணவரவு கிடைக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் திட்டுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**கடகம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். தாயாரின் உடல்நலத்தில் கவனம் தேவை. மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வாகன வசதிப் பெருகும். வியாபாரத்தில் பற்றுவரவு உயரும். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். முகப்பொலிவு கூடும். வியாபாரத்தில் புது முயற்சிகள் பலிதமாகும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**துலாம்**
ராசிக்குள்சந்திரன் இருப்பதால்வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் சிக்கிக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
திட்டமிட்ட காரியங்களை முடிப்பீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுங்கள். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிக்க வேண்டி வரும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**தனுசு**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஆதரவு கிட்டும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**மகரம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள்.

**கும்பம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில வேலைகள் தடைப்பட்டு முடியும். வீண் செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாட்களுடன் டென்ஷன் அதிகரிக்கும். எதிர்பார்த்த சலுகைகள் முடியும்.

# பனைசார் பொருள் உற்பத்தியாளர்களுக்கு யாழில் சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 02

யாழில் பனை சார் உற்பத்தி ஏற்றுமதி நிறுவனங்கள், பனை சார் பொருள் உற்பத்தியாளர்கள், கைப்பணிப் பொருள்கள் உற்பத்தியாளர்கள் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.




பனை அபிவிருத்தி சபையின் ஏற்றுமதியாளர்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே பனைசார் உற்பத்தியாளர்கள் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதில், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த விஜயரத்ன, கடற்றொழில் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ)

# தேயிலை ஏற்றுமதி வருமானத்தை விட பனை மூலம் அதிகமாக பெறமுடியும்

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 02

பனை மரங்கள் இலங்கையின் பொக்கிஷமாகும். பனை சார் பொருட்களின் ஏற்றுமதியின் மூலமான வருமானத்தை தேயிலையின் ஏற்றுமதி மூலமான வருமானத்தை விட அதிகமாக பெறமுடியும் என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

பனை அபிவிருத்தி சபையின் ஏற்றுமதியாளர்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“பனை துறையை நாம் அபிவிருத்தி செய்ய வேண்டும். பனை சார் அதிகாரிகளின் செயல்பாடுகள் சிறப்பாக இருக்குமானால் ஏற்றுமதியை நிச்சயம் அதிகரிக்க முடியும்.

இது தொடர்பில் அனைவரும் இணைந்து தீர்மானங்களை மேற்கொண்டு இந்தத் துறையை புதிய திசையை நோக்கி கொண்டுசெல்ல வேண்டும். ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கின்ற மற்றும் வரவேற்கின்ற கூட்டமாக இது அமைய வேண்டும். மேலும், ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது.

இந்த வளத்தை உற்பத்தியாளர்கள் சிறந்த முறையில் பயன்படுத்தினால் அவர்களின் எதிர்காலத்தை செல்வச்செழிப்புள்ளதாக மாற்றமுடியும்”- என்றார்.

(எ)

# 2025இல் பனைசார் அபிவிருத்திக்கு 45 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஓக. 02

2025 ஆம் ஆண்டு பனைசார் அபிவிருத்திக்கு 45 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த விஜயரத்ன தெரிவித்தார்.

பனை அபிவிருத்தி சபையின் ஏற்றுமதியாளர்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பனை அபிவிருத்தி கலாசாரத்தில் ஈடுபட்டதில் தான் மகிழ்வடைதாகவும், யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வந்த முதலாவது சந்தர்ப்பம் என்பதால் மக்கள் தன் மீது வைத்த நம்பிக்கைக்கு நன்றி தெரிவித்தார். மேலும் பண்பாட்டு ரீதியாக ஏற்றுமதி பயிர்களை விட பனை அதிகமாக உள்ளதாகவும் பனை சார் அபிவிருத்தியில் ஆய்வுகள், உற்பத்தி மேம்பாடு மூடப்பட்ட உற்பத்திச் சாலைகளை மீள் இயங்க வைத்தல், விற்பனை நிலையங்கள் அமைத்தல் போன்றவற்றில் அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

மேலும், பனை சார் உற்பத்தியில் இளைஞர்களை அதிகமாக ஈடுபடுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பனை உற்பத்தி பானங்களை பாடசாலை மட்டத்தில் விநியோகிக்க கல்வி அமைச்சுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

சுற்றுலாத்துறையுடன் இணைந்து பனை சார் உற்பத்தி பொருட்களை சர்வதேச மட்டத்தில் நடத்தப்படும் கண்காட்சிகளில் வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். மேலும், திக்கம் வடிசாலையை மீள இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் பனை சார் உற்பத்தியில் பெண்களின் பங்களிப்பும் அதிகமாக உள்ளதாகவும் அதனை மேலும் முன்னேற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

தென்னை அபிவிருத்தி சார் நடவடிக்கைகளுக்காகவும் வடக்கு தென்னை முக்கோண வலய செயல்பாடுகளை தொடங்குவதற்காகவும் ஜனாதிபதி விரைவில் வடக்குக்கு வரவுள்ளதாகவும் அதற்கான தயார்படுத்தல்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைசார் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடினார்.

(எ)

# யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 02

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களான வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கிராமிய அபிவிருத்தித் திட்டம், வீதி அபிவிருத்தித் திட்டம், வீட்டுத் திட்டம் போன்ற திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயப்பட்டு, உரிய காலத்தில் வினைத்திறனாக நிறைவேற்றி முடிக்க அரசாங்க அதிபரால் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# ரோஹித எம். பியின் மருமகனுக்கு பிணை

கொழும்பு, ஓக. 02

சர்ச்சைக்குரிய ஜீப் வண்டி கொடுக்கல் வாங்கல் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் மருமகன் தனுஷ்க வீரக்கொடி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் மத்துகம நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்த பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அவருக்கு நேற்று பிணை வழங்கப்பட்டது.

இதன்போதே, ரோஹித அபேகுணவர்தனவின் மருமகன் தனுஷ்க வீரக்கொடியை 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்தது. (ஐ)

# சொத்து விவரம் சமர்ப்பிக்க தவறியோருக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 02

லஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணையத்தின் அறிவிப்பின்படி, சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளை சரியான நேரத்தில் சமர்ப்பிக்கத் தவறிய 25 பாராளுமன்ற உறுப்பினர்கள், 100 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சபாநாயகர் டாக்டர் ஜகத் விக்ரமரத்ன எச்சரிக்கை கடிதங்களை அனுப்பியுள்ளார்.

சொத்து மற்றும் பொறுப்புச் சட்டத்தின்படி ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 31 ஆம் திகதி வரை வைத்திருக்கும் அனைத்து சொத்துகளின் விவரங்களை ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் சபாநாயகரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

இதற்கிடையில், ஜூன் 30 ஆம் திகதிக்குள் சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளை சமர்ப்பிக்கத் தவறிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும், ஜூலை 1 முதல் ஒகஸ்ட் 31 வரை சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளை சமர்ப்பிக்கத் தவறிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் எனவும் பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# ஆசிரியை குறித்து அவதூறு பரப்பிய யூ-ரியூப்பருக்கு ஒத்திவைத்த சிறை

கொழும்பு, ஓக. 02

ஆசிரியை ஒருவர் தொடர்பில் பொய்யான - வெறுப்பூட்டும் தகவல்களை யூ-ரியூப் சனல் ஊடாக பரப்பியவருக்கு 6 மாதம் ஒத்திவைத்த சிறை தண்டனை விதித்தது கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம்.

கொழும்பு - கடுவலையை சேர்ந்த நபர் ஒருவருக்கே நீதிவான் தனுஜா லக்மாலி நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்தத் தண்டனையை விதித்துள்ளார்.

கொழும்பை சேர்ந்த ஆசிரியை ஒருவர் குற்றப் புலனாய்வு பிரிவில் செய்த முறைப்பாட்டையடுத்துத் தொடரப்பட்ட வழக்கில் பிரதிவாதியான யூ-ரியூப்பர் குற்றவாளியாகக் காணப்பட்டார். இதையடுத்து, அவருக்கு 6 மாதங்களுக்கு ஒத்திவைத்த சிறை தண்டனை விதித்து நீதிவான் தீர்ப்பளித்தார். (ஐ)

# தனிநபரின் மின்சார பாவனை 700 கிலோவாட்ஸாக அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 02

நாட்டில் ஒரு தனிநபர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு அதிகரித்துள்ளது என்று மின்சார சபை தெரிவித்துள்ளது. இதன்படி, ஒரு தனிநபர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு 700 கிலோவாட்ஸ் ஆக அதிகரித்துள்ளது.

இது மின்சார தேவையின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது. 2023 ஆம் ஆண்டில் ஒரு தனிநபர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு 642 கிலோவாட்ஸ் ஆகவும் 2024 ஆம் ஆண்டில் 693 கிலோவாட்ஸ் ஆகவும் காணப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே, 2025 இல் தனிநபர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு அதிகரித்துள்ளது.

இந்த நவீன காலத்தில் பெரும்பாலான வீடுகளில் மின்விளக்குகள், குளிர்சாதனப் பெட்டிகள், மின் விசிறிகள் உள்ளிட்ட பல மின் உபகரணங்கள் உள்ளன. மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கையில் அதிகளவு மின்சாரத்தை பயன்படுத்துகின்றனர்.

கல்வி நடவடிக்கைகளுக்கும் மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது.

அத்துடன், சுகாதாரத் துறையிலும் மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது. மின்சாரத்தை பயன்படுத்தும் அளவில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி நாட்டின் டிஜிற்றல் மாற்றத்தை எடுத்துக்காட்டுகிறது.

இது அரசாங்கத்தின் நிலையான எரிசக்தி மாற்றத்துக்கான உறுதிப்பாட்டையும் மேம்படுத்துகின்றது - என்று மின்சார சபை கூறியுள்ள. (ஐ)

# புத்தியுடன் இதயத்தையும் விருத்தி செய்யும் கல்விமுறைமை அவசியம்!

## பிரதமரிடம் மகாநாயக்கர்கள் அறிவுறுத்து

கொழும்பு, ஓக. 02

“புத்தியை மட்டும் விருத்தி செய்யும் கல்வி முறைக்குப் பதிலாக இதயத்தையும் விருத்தி செய்து கருணையுடன்கூடிய போதிசத்துவ குணங்கள் கொண்ட குழந்தைகளை உருவாக்க புதிய கல்விச் சீர்திருத் தத்தில் கவனம் செலுத்த வேண்டும்”, என்று அஸ்கிரிய, மல்வத்து மகா நாயக்க தேரர்கள் பிரதமர் ஹரிணிக்கு அறிவுறுத்தியுள்ளனர்.



புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக மகா நாயக்க தேரர்களை சந்தித்து ஆலோசனை பெற்றபோதே பிரதமருக்கு அவர்கள் இந்த அறிவுறுத்தலை வழங்கினர்.

மேலும், புதிய கல்வி சீர்திருத்தத்தில் நன்னெறி கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பதுடன், குழந்தைகளின் தொழில்சார் திறன்களையும் மனிதாபிமானப் பண்புகளையும் ஒருங்கே வளர்க்க வேண்டியது அவசியம். அத்துடன், புதிய கல்விச் சீர்திருத்தத்துடன் இணைந்ததாக பிரிவெனா கல்வியில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்தும் இதன் போது பேசப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கைக்குண்டுடன் மூவர் கைது!

கொழும்பு, ஓக. 02

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அநுராதபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# எரிவாயு விலைகளில் மாற்றம் எதுவுமில்லை

கொழும்பு, ஓக. 02

ஒகஸ்ட் மாதத்தில் லிட்ரோ சமையல் எரிவாயு விலையில் மாற்றம் இல்லை என்று லிட்ரோ, லாப்ஸ் எரிவாயு நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

தற்போது விற்பனை செய்யப்படும் விலையிலேயே தொடர்ந்தும் எரிவாயு விற்பனையாகும் என்றும் அந்த நிறுவனங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ)

# வருமான வரி ஏய்த்தமைக்காக பியூமிக்கு எதிராக வழக்கு தாக்கல்!

கொழும்பு, ஓக. 02

பிரபல மொடல் அழகி பியூமி ஹன்சமாலி 28 . 9 போடி ரூபாய்க்கும் அதிகமான வருமான வரி செலுத்தாததற்காக எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்போவதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

அவர் 2022, 2023ஆம் ஆண்டுகளுக்கான வருமான வரி செலுத்துவதைத் தவிர்த்தார் என்றும் கூறப்பட்டது. அத்துடன், விராஞ்சித் தம்புகல என்ற பிரபல தொழிலதிபரும் அந்த இரண்டு ஆண்டுகளுக்கு வருமான வரி செலுத்தத் தவறிவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வரி குற்றங்கள் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்ற அறிக்கைகள் நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன முன்னிலையில் அழைக்கப்பட்டது.

அரசாங்கத்துக்கு வரி ஏய்ப்பு செய்தமைக்காக பியுமி ஹன்சமாலி, அவுரா லங்கா தலைவர் விராஞ்சித் தம்புகல ஆகியோருக்கு எதிராக எதிர்காலத்தில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுப்பதாக உள்நாட்டு இறைவரி திணைக்களம் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு தெரிவித்தது.

இருவருக்கும் எதிரான விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதன்படி, எதிர்காலத்தில் அவர்களுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்றும் இறைவரித் திணைக்கள ஆணையாளர் சார்பில் ஆஜரான சிரேஸ்ட சட்டத்தரணி தினேஷ் பெரேரா, நீதிமன்றத்தில் அறிவித்தார்.

2022, 2023ஆம் ஆண்டுகளில் ஹன்சமாலி தனி நபர் வருமான வரியான 19.4 கோடி ரூபாயையும், லோலியா என்ற நிறுவனத்தை நடத்தி 9.5 மில்லியன் ரூபாய் வருமான வரியையும் செலுத்தவில்லை. இதேபோன்று, இந்த இரு ஆண்டுகளும் 19.4 கோடி ரூபாய் வரியை தம்புகல செலுத்தவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இந்தியாவுடனான உடன்படிக்கையில் நாட்டுக்கு பாதிப்பை தரும் விடயங்கள்

## சந்தேகம் எழுப்புகிறது ஐக்கிய தேசிய கட்சி

கொழும்பு, ஓக. 02

இந்தியாவுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளிவருகின்றன. ஆனால், அரசாங்கம் அது தொடர்பில் எந்தக் கருத்தையும் தெரிவிப்பதில்லை. இதில் நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற விடயங்கள் இருக்க வேண்டும். அதனாலேயே அதனை வெளியிட அச்சப்பட்டு வருகிறது என்று ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் பணிமனையில் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க பதவிக்கு வந்த பின்னர் இதுவரை 6 நாடுகளுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ளார். அந்த நாடுகளுடன் பல்வேறு ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்டுள்ளார். ஆனால், அரசாங்கம் இவ்வாறு வெளிநாடுகளுடன் கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் எதுவும் நாட்டுக்கு வெளிப்படுத்தியதில்லை.

குறிப்பாக, இந்தியாவுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளிவருகின்றன. ஆனால், அரசாங்கம் அது தொடர்பில் எந்தக் கருத்தையும் தெரிவிப்பதில்லை. அரசாங்கம் இவ்வாறு இந்தியாவுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்களை மறைப்பதாக இருந்தால், அதில் நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற விடயங்கள் இருக்க வேண்டும். அதனாலேயே அதனை வெளியிட அச்சப்பட்டு வருகிறது.

திருகோணமலை முத்துநகரில் பல ஆண்டு காலமாக விவசாயம் செய்துவந்த பூமியை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனால், அந்த மக்கள் இன்று வீதியில் இறங்கி போராடி வருகின்றனர்.

இதேபோன்று கப்பல்கள் திருத்தும் டொக்யாட் நிறுவனத்தையும் இந்திய நிறுவனத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் இவ்வாறு செயல்படுவது இந்திய அரசாங்கத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையிலா என்ற சந்தேகம் எழுகிறது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனை மாணவர் மத்தியில் தீவிரம்!

## ஒழிக்க சகலரின் ஒத்துழைப்பும் தேவை என்கிறார் அமைச்சர் வசந்த சமரசிங்க

கொழும்பு, ஓக. 02

**பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை தீவிரமடைந்துள்ளமை பாரதூரமானது. போதைப் பொருள் வர்த்தகத்துக்கும் அரசாங்கத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. ஆகவே, போதைப்பொருள் ஒழிப்புக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென உணவு பாதுகாப்பு மற்றும் வணிக, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.**

அநுராதபுரத்தில் அதிகாரிகளை சந்தித்து பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

போதைப்பொருள் ஒழிப்புக்கான நடவடிக்கைகள் சகல அமைச்சு மற்றும் திணைக்கள மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை தீவிரமடைந்துள்ளமை பாரதூரமானதுடன் துரதிர்ஷ்டமானது.

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் வியாபாரத்துக்குமிடையில் அரசியல் தொடர்பிருப்பதாக கடந்த காலங்களில் குறிப்பிடப்பட்டது. எமது அரசாங்கத்துக்கும் போதைப் பொருள் வர்த்தகர்களுக்கு இடையில் எவ்வித தொடர்பும் கிடையாது. இதனால்தான் போதைப்பொருள் ஒழிப்புக்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் ஒழிப்புக்கு கல்வி அமைச்சு மட்டத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சட்டவிரோதமான செயல்பாடுகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (ஐ)

# முன்னாள் அமைச்சர் சந்திரசேன பிணையில் விடுவிக்கப்பட்டார்!

கொழும்பு, ஓக. 02

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் எஸ். எம். சந்திரசேனவை பிணையில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் எஸ். எம். சந்திரசேன நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன்போதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எஸ். எம். சந்திரசேன, 2015 ஜனாதிபதி தேர்தலின்போது தனது 2.5 கோடி ரூபாய் பெறுமதியான சோள விதைகளை வழங்கியமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் கடந்த ஜூன் 4 ஆம் திகதி முன்னிலையானபோது கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தேசிய ஊழல் எதிர்ப்பு பிரிவினருடன் ஜனாதிபதியின் செயலர் சந்திப்பு!



கொழும்பு, ஓக. 02

தேசிய ஊழல் எதிர்ப்பு செயல் திட்டப் பிரதானிகளுடன் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க கலந்துரையாடியுள்ளார்.

இந்த கலந்துரையாடல் ஜனாதிபதி பணிமனையில் நடைபெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய ஊழல் எதிர்ப்பு செயல் திட்டம் 2025 தொக்கம் 2029 வரை செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிட நியமிக்கப்பட்ட தேசிய செயல் குழு மற்றும் அது குறித்து பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ள அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் பிரதானிகள் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

'வளமான நாட்டை நோக்கி' என்ற தொனிப்பொருளின் கீழ் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் எண்ணக்கருவின் படி ஏப்ரல் 9ஆம் திகதி 'தேசிய ஊழல் எதிர்ப்பு செயல் திட் டம்' ஆரம்பிக்கப்பட்டதுடன், 2025ஆம் ஆண்டு முதல் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய ஊழல் எதிர்ப்பு செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயல்பாடுகள் தொடர்பான பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களின் பிரதானிகள், அவர்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக செயல்பாட்டுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்றும், அந்த செயற்பாட்டு திட்டங்களின் முன்னேற்றத்தை தேசிய செயற் குழு அவ்வப்போது மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ஐ)

# மாணவிக்கு ஆபாசப்படம் அனுப்பியவரை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஓக. 02

ஆபாச காணொலியை ஆசிரியையான தனது மனைவியிடம் கற்கும் மாணவிக்கு அனுப்பியவரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர் தனது மனைவியுடன் அந்தரங்கமாக இருக்கும் காணொலியை இரகசியமாக பதிவு செய்தே மாணவிக்கு அனுப்பியுள்ளார் என்றும் தெரிய வருகிறது.

சந்தேகநபரின் மனைவியான ஆசிரியர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் வழக்கு தொடரப்பட்டது.

இதன்போது, சிறுவர் மற்றும் மகளிர் பணியக அதிகாரிகள் அளித்த அறிக்கைகளின் அடிப்படையில் சந்தேகநபரை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், குடும்ப தகராறால் மனைவியை பழிவாங்க அவர் இவ்வாறு நடந்து கொண்டார் என்று கூறப்படுகிறது. (ஐ)

# மீனவரை கொல்ல சதி

கொழும்பு, ஓக. 02

மீனவர் ஒருவரை சுட்டுக்கொல்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது. துப்பாக்கி செயலிழந்தமையாலேயே இந்த முயற்சி தோல்வியடைந்ததாகக் கூறப்படுகிறது.

காலி - ஹிக்கடுவை - தொடந்துவ மீன்பிடி துறைமுக பகுதியிலேயே நேற்று முன்தினம் இரவு 9.30 மணியவில் இந்தக் கொலை முயற்சி இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை முயற்சி தோல்வியில் முடிவடைந்ததைத் தொடர்ந்து துப்பாக்கிதாரிகள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

பண கொடுக்கல் வாங்கல் தொடர்பான பிரச்னையிலேயே இந்தத் துப்பாக்கிச்சூட்டு முயற்சி இடம்பெற்றதாகவும் சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் பேச்சாளர் எவ். யூ. வூட்லர் தெரிவித்துள்ளார். (ஐ)

# மாரவில பெண் சுட்டுக்கொலை சந்தேகநபர்கள் இருவர் கைது!

கொழும்பு, ஓக. 02

மாரவிலவில் பெண் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதான இருவரும் 26, 33 வயதுடையவர்கள் என்றும் பங்கதெனிய, பல்லம பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும் கூறப்படுகிறது.

இந்தக் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி மாதம்பை - இரட்டைகுளம் பகுதியில் கழிவறை ஒன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான குடு மாலி என்பவரின் மகள் கடந்த 22ஆம் திகதி புத்தளம் - மாரவில பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தில் அவரின் 10 வயதான மகன் படுகாயமடைந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திருட்டு சந்தேகம் இருவர் கைதாகினர்

கொழும்பு, ஓக. 02

திருட்டு சந்தேகத்தில் கொழும்பு வடக்கு குற்ற விசாரணை பணியகத்தால் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கிராண்ட்பாஸ் பகுதியில் நேற்று முன்தினம் 03 கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டார். அவரின் வீட்டிலிருந்து ஏராளமான கைபேசிகள், மடிக்கணினிகள் கைப்பற்றப்பட்டன. இவை பல்வேறு இடங்களில் சந்தேகநபரால் திருடப்பட்டவை என்று தெரிய வந்தது.

இதேபோன்று, வெல்லம்பிட்டி பகுதியிலும் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 18 கையடக்க தொலைபேசிகள், 02 மடிக்கணினிகள், ஒரு கைக்கணி, 01 பொலிஷர் இயந்திரம், 05 கிரைண்டர்கள், 03 கிரில் இயந்திரங்கள் எனப்பல பொருட்கள் கைப்பற்றப்பட்டன. (ஐ)

# கொழும்பு - பதுளை இடையே புதிய சொகுசு ரயில் சேவை

கொழும்பு, ஓக. 02

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை வரையில், புதிய சொகுசு ரயில் சேவையை இயக்குவதற்கு புகையிரதத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி முதல் இந்த சொகுசு ரயில் சேவை நடைபெறும். உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகளின் வருகையை மேலும் அதிகரிக்கும் நோக்கில் இந்த ரயில் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

350 ஆசனங்களைக் கொண்ட எல்ல வீக்எண்ட் எக்ஸ்பிரஸ் ரயில் பிரதி சனிக்கிழமைகளில் காலை 5.30க்கு கொழும்பு கோட்டையிலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும். அத்துடன், பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 9 மணிக்கு பதுளையில் இருந்து கொழும்புக்கு சேவையில் ஈடுபடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இஸ்ரேலுக்கு வழங்கும் சலுகை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஓக. 02

இஸ்ரேலிய உளவுத்துறை நடவடிக்கைகள், சட்டவிரோத மையங்கள் நாட்டுக்குள் சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளன. இது, நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு நேரடி அச்சுறுத்தல் இவ்வாறு விமர்சித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்.

இஸ்ரேலிய குடிமக்களுக்கான வீசா இல்லாத கொள்கை தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பலஸ்தீனத்துக்கு எதிரான போரை உலகமே கண்டிக்கும் நிலையில், இலங்கை அரசாங்கம் இஸ்ரேலுடன் இணைந்து செயல்படுகிறது. ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் இலங்கையின் நீண்டகால பலஸ்தீனத்தை ஆதரிக்கும் வரலாற்றிலிருந்து விலகிச் சென்றுள்ளது.

எதிர்க்கட்சியில் இருந்தபோது, ஜனாதிபதியும் அவரின் நெருங்கியவர்களும் தூதரகங்களுக்கு வெளியே பலஸ்தீன உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தனர். எனினும், இன்று அவர்களின் அரசாங்கத்தின் கொள்கையில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட ஒரு நாட்டை எமது நாட்டுக்குள் எந்தவித விசாரணையும் இல்லாமல் சுதந்திரமாக செயல்பட அனுமதிப்பது தவறானது. இஸ்ரேலிய உளவுத் துறை நடவடிக்கைகள், சட்டவிரோத மையங்கள் நாட்டுக்குள் சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளன. இது, நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு நேரடி அச்சுறுத்தல் என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதி துறையில் 6.8 சதவீத வளர்ச்சி!

## மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஓக. 02

**பொருட்கள் மற்றும் சேவைகள் உள்ளடங்கலாக மொத்த ஏற்றுமதிகள் நடப்பு ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ஆயிரத்து 10 கோடி அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. இது 6.8 சதவீத வளர்ச்சி என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.**

ஜூன் மாதத்தில் ஏற்றுமதியைவிட இறக்குமதிகளில் உயர்ந்தளவு வளர்ச்சி பதிவாகியுள்ளது.

தனியார் மற்றும் வர்த்தக நோக்குடைய வாகனங்கள் உள்ளடங்கலாக வாகன இறக்குமதிகள் ஜூன் மாதத்தில் 16.3 கோடி அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. இதனால், நடப்பு ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மொத்த வாகன இறக்குமதிகள் 47.5 கோடி அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

ஜூன் மாதத்திலும் ஆண்டின் முதல் ஆறு மாதங்களிலுமாக ஐக்கிய அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியன பிரதான ஏற்றுமதி நாடுகளாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

இதேவேளை, சீனா, இந்தியா, ஐக்கிய அரபு இராச்சியம் என்பன முதல் நிலையிலுள்ள இறக்குமதி நாடுகளாகவும் காணப்படுகின்றன. சுற்றுலா துறை வருமானம் நடப்பாண்டின் முதல் ஆறு மாதங்களில் 170 கோடி அமெரிக்க டொலராக மதிப்பீடு செய்யப்பட்டு, 10 சதவீதம் வளர்ச்சியை பதிவு செய்தது.

இதேபோன்று, வெளிநாட்டு தொழிலாளர் பணவனுப்பல்கள் நடப்பாண்டின் முதல் ஆறு மாதங்களில் 18.9 சதவீத வளர்ச்சியடைந்துள்ளது - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நீதிமன்ற கட்டமைப்பு டிஜிற்றல் மயமாவது விரைவுபடுத்தப்படும்

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 02

நாடு முழுவதும் நீதிமன்ற கட்டமைப்பை டிஜிற்றல் மயமாக்குவதை விரைவுபடுத்தத் திட்டமிட்டுள்ளதாக புதிதாக நியமிக்கப்பட்ட பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன தெரிவித்துள்ளார்.

நீதி நிர்வாகத்தில் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட முறைகளைப் பின்பற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றும் அவர் கூறினார்.

நாட்டின் 49ஆவது பிரதம நீதியரசரை வரவேற்கும் சம்பிரதாய நிகழ்வு உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



முன்மொழியப்பட்ட டிஜிற்றல் மயமாக்கல் முயற்சி தொடர்பாக வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவருடன் ஏற்கனவே பலமுறை கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன், டிஜிற்றல் முறையை செயல்படுத்துவது குறித்து விவாதிக்க நீதி அமைச்சர், நீதி அமைச்சின் செயலாளருடன் சந்திப்புகளை நடத்தியுள்ளார் என்றும் இது நாடு முழுவதும் ஆவலுடன் எதிர்பார்க்கிறது எனவும் அவர் கூறினார்.

# எம். பிக்களின் ஓய்வூதியம் இரத்து சட்டமூல வரைவு அமைச்சரவைக்கு

கொழும்பு, ஓக. 02

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்து செய்வது தொடர்பான சட்டமூல வரைவு, அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படுமென பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நிபுணத்துவம் வாய்ந்த சட்டவரைஞர்களால் தயாரிக்கப்பட்டுள்ள மேற்படி சட்டமூல வரைவு, பரிசீலனைக்காக சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் அடுத்த வாரம் அதனை அமைச்சரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிக்கமைய, இந்த நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட வாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மசாஜ் நிலையத்தில் பணம் கொள்ளை!

கொழும்பு, ஓக. 02

மசாஜ் நிலையத்துக்குள் நுழைந்து காசாளரின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி 60 ஆயிரம் ரூபாய் பணம், இரு கைபேசிகள் கொள்ளையடிக்கப்பட்டன என்று பேலியகொடை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

களனி ரயர் சந்தியிலுள்ள மசாஜ் நிலையம் ஒன்றுக்குள் வாள்,

கத்தியுடன் நுழைந்த மூவரே இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டனர் என்று தெரிய வருகிறது.

மசாஜ் நிலையத்தில் சேவை பெறப் போவதாகக் கூறியே இந் தக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# போதைப்பொருளுடன் 3,307 பேர் கைதாகினர்

கொழும்பு, ஓக. 02

நாட்டில் கடந்த 25ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 3 ஆயிரத்து 307 பேர் குது செய்யப்பட்டனர்.

பொலிஸ், விசேட அதிரடி படை, இராணுவம், கடற்படையினர் இணைந்து இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது, ஹெரோயினுடன் ஆயிரத்து 115 பேரும் ஐஸ் போதைப்பொருளுடன் ஆயிரத்து 136 பேரும் குஷ் போதைப்பொருளுடன் 23 பேரும், கஞ்சாவுடன் 959 பேரும் கஞ்சா செடிகளுடன் 25 பேரும் போதை மாத்திரைகளுடன் 44 பேரும் சட்டவிரோத சிகரெட்களுடன் 5 பேரும் கைதாகினர்.

இதேவேளை, 2 கிலோ 149 கிராம் 309 மில்லிகிராம் ஹெரோயின், 2 கிலோ 6 கிராம் 305 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள், 39 கிராம் 25 மில்லிகி ராம் குஷ் போதைப்பொருள். 174 கிலோ 323 கிராம் 746 மில்லிகிராம் கஞ்சா,

57 ஆயி ரத்து 951 கஞ்சா செடிகள், ஒரு கோடியே 33 இலட்சத்து 4 ஆயிரத்து 838 போதை மாத்திரைகள், 79 சட்டவிரோத சிகரெட்கள் கைப்பற்றப்பட்டன. (ஐ)

# உயரும் நுரையீரல் புற்றுநோய்; ஆண்களே அதிகம் பாதிப்பு!

கொழும்பு, ஓக. 02

நாட்டில் பெண்களுடன் ஒப்பிடும்போது ஆண்களுக்கு நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவது அதிகரித்து வருகிறது என்று சத்திர சிகிச்சை நிபுணர் சமன் இத்தகொட தெரிவித்துள்ளார்.

உலக நுரையீரல் புற்றுநோய் தினத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நுரையீரல் புற்றுநோய் வெவ்வேறு காரணிகளால் ஏற்படுகிறது. எனினும், பெரும்பாலும் சிகரெட்களில் உள்ள இரசாயனங்களாலேயே அதிகளவில் நுரையீரல் புற்றுநோய் ஏற்படுகிறது.

அத்துடன், நாட்டில் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு; சந்தன தலைமையில் உபகுழு

கொழும்பு, ஓக. 02

அரச சேவையில் தற்போது நிலவும் சம்பள முரண்பாடுகள் - அது சம்பந்தமான பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கு பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனை குழுவின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் சந்தன சூரியராச்சி தலைமையில் உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எச்.எம்.எச். அபயரத்ன தலைமையில் மற்றும் பிரதி அமைச்சர் ருவன் செனரத் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றலில் கடந்த 24 ஆம் திகதி இடம் பெற்ற அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது, நடைமுறையிலுள்ள பொதுநிர்வாக சுற்றுநிருபம் 6⁄2006 மற்றும் 3⁄2016 என்பவற்றின் மூலம் அரச சேவையில் சம்பளம் தொடர்பான விடயங்கள் தீர்மானிக்கப்படுவதாகவும், அரச சேவையில் பல்வேறு பதவிகளுக்கான கடமைகள் திட்டவட்டமாக இல்லை என்பதும், பல்வேறு முரண்பாடுகள் மற்றும் பொருத்தமின்மைகள் காரணமாக அதிருப்தியான நிலைமையினால் இது தொடர்பில் பல்வேறு விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் கடந்த காலங்களில் ஏற்பட்டதாக இங்கு கருத்துத் தெரிவித்த உப குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இதற்கமைய, அரச சேவையின் தொழில்முறையை உயர்த்துவதற்கு தற்போது காணப்படும் பதவிகள் மற்றும் அவற்றுக்கான கடமைகள், சம்பள அளவு போன்றவை தொடர்பில் விஞ்ஞானரீதியாக மீளாய்வுக்குப் பின்னர் ஒட்டுமொத்த அரச சேவைக்கு புதிய சம்பள அமைப்பொன்றை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான முன்மொழிவுகளை இந்த உப குழுவின் மூலம் முன்வைக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# வைப்பில் ரூ. 175 கோடி; பெண் ஒருவர் கைது!

கொழும்பு, ஓக. 02

175 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையை வங்கிக் கணக்கில் வைத்திருந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமான வழிகளில் பணம் ஈட்டினார் என்ற குற்றச்சாட்டில் சட்டவிரோத சொத்துகள் புலனாய்வு பிரிவால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர், போதைப் பொருள் கடத்தல்காரர் ஒருவரின் மனைவி என்று அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு மோசடி 7 மாதங்களில் 567 வழக்குகள் தாக்கல்

கொழும்பு, ஓக. 02

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகளில் ஈடுபட்ட தனிநபர்கள், உரிமம் பெறாத நிறுவனங்களுக்கு எதிராக கடந்த ஏழு மாதங்களில் 567 நீதிமன்ற வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

இந்தக் காலகட்டத்தில் 2 ஆயிரத்து 620 முறைப்பாடுகள் கிடைத்தன. வேலை தேடுபவரகளை ஏமாற்றியதாக சந்தேக நபர்களிடமிருந்து 19. 94 கோடி ரூபாய்க்கும் அதிகமான பணம் மீட்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட உரிமம் பெற்ற வேலைவாய்ப்பு நிறுவனம் உள்ளிட்ட ஐந்து நிறுவனங்களில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் சிறப்பு புலனாய்வுப் பிரிவு சோதனைகளை மேற்கொண்டது.

இதன்போது உரிமம் பெற்ற நிறுவனங்களில் இருந்து ஏழு பேர் உட்பட மொத்தம் 36 பேர் கைது செய்யப்பட்டனர்.

2024ஆம் ஆண்டில் மட்டும், வேலைவாய்ப்பு தொடர்பான மோசடியால் பாதிக்கப்பட் டவர்களிடமிருந்து ஒரு கோடியே 82 இலட்சம் ரூபாய் பணத்தை பணியகம் மீட்டுள்ளது. கடந்த ஆண்டில் மொத்தம் 4,658 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன.

இந்நிலையில், இஸ்ரேல், தென் கொரியா, ஜப்பான், ருமேனியா மற்றும் மத்திய கிழக்கு போன்ற நாடுகளில் வேலை வாய்ப்புகளை கையாளும்போது, குறிப்பாக மோசடி வழக்குகள் பதிவான நிலையில் எச்சரிக்கையாக இருக்குமாறு பொதுமக்களுக்கு பணியகம் அறிவுறுத்தியுள்ளது.

1989 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொண்டு வேலை வாய்ப்புகளை சரி பார்க்குமாறும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம்மேலும்தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூரில் மனித எச்சங்கள்: அது ஒரு மயான பூமி அல்ல

## நீதிமன்றில் தொல்பொருள் திணைக்களம்



சம்பூர், ஓக. 02

**கிழக்கு மாகாணத்தில் அரச படைகளால் கொல்லப்பட்ட தமிழர்களை நினைவுகூரும் வகையில் சம்பூரில் அமைக்கப்பட்ட நினைவுச்சின்னத்துக்கு அருகில் மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் "ஒரு மயான பூமி" என்ற கூற்றை ஆதரிக்க போதுமான ஆதாரங்கள் இல்லையென தொல்பொருள் திணைக்களம் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளது.**

அந்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்களின் உரிமையாளர்களின் மரணத்துக்கான காரணத்தைக் கண்டறிய மேலும் ஆழமான ஆய்வுகள் நடத்தப்பட வேண்டுமென சட்ட வைத்திய அதிகாரி நீதிவான் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சம்பூர் கடற்கரையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையை மேற்கொண்டிருந்த பிரித்தானியாவை தளமாகக் கொண்ட ஒரு நிறுவனம் ஜூலை 20 ஆம் திகதி அன்று மண்டை ஓடு உள்ளிட்ட எலும்புகளைக் கண்டுபிடித்தது.

ஜூலை 30 ஆம் திகதிக்குள் அந்த இடத்தின் வரலாறு குறித்து நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க தொல்பொருள் திணைக்களத்துக்கு உத்தரவிட்ட மூதூர் நீதிபதி, அகழ்வாய்வு குறித்த அறிக்கையை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்க சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

புதன்கிழமை (ஜூலை 30) வழக்கு மீண்டும் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகவும், மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் மனித புதைகுழி இருந்ததா? அல்லது அது தொல்லியல் திணைக்களத்துக்கு சொந்தமான காணியா? என்பதை துல்லியமாக உறுதிப்படுத்தக்கூடிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்துக்குத் தெரிவித்ததாகவும் அறியமுடிகிறது.

மனித எலும்புகள் நீண்டகாலத்துக்கு உட்பட்டவையாக இருப்பதாக திருகோணமலை சட்ட வைத்திய அதிகாரி நிர்மால் பொறுக்கம தனது அறிக்கையில் மூதூர் நீதிவான் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளார்.

அந்த எச்சங்களுக்குரிய நபர்களின் மரணம், காயங்களினூடாக ஏற்பட்டதா? அல்லது இயற்கை மரணமா? அல்லது ஏதாவது குற்றவியல் சம்பவத்துடன் தொடர்புபட்டவையா? என்பதை தீர்மானிக்க மேலும் ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளார்.

சம்பூர் கடற்கரையில் கண்ணிவெடி அகற்றும் பணியை மேற்கொள்ளும் பிரித்தானியாவைச் சேர்ந்த மாக் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் நீதிமன்றத்துக்கு நிபுணர் அறிக்கையை வழங்குவதற்காக சட்ட வைத்திய அதிகாரி களை ஆய்வு நடத்தியுள்ளதாகவும், அந்த இடத்தில் பல மண்டை ஓடுகள் மற்றும் எலும்புத் துண்டுகளை கண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த இரண்டு நிபுணர் அறிக்கைகளின் அடிப்படையில், அரச பகுப்பாய்வுத் திணைக்களம், திருகோணமலை சட்ட வைத்திய அதிகாரி, புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம், தொல்பொருள் திணைக்களம், காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் பொலிஸார் உள்ளிட்டோரை, அந்த இடத்தில் அகழ்வாய்வுப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமா? இல்லையா? என்பதைப் பற்றி விவாதிக்க எதிர்வரும் 6ஆம் திகதி நீதிமன்றத்தில் கூடுமாறு நீதிவான் தஸ்னீம் பௌசான் உத்தரவிட்டுள்ளார்.

57 பொதுமக்கள் சுட்டும் வெட்டியும் எரியூட்டியும் கொலை செய்யப்பட்ட, இலங்கை இராணுவத்தின் மீது குற்றம் சாட்டப்படும் ஜூலை 7, 1990 சம்பூர் படுகொலையின் நினைவாக பாதிக்கப்பட்ட கிராம மக்களால் அமைக்கப்பட்ட நினைவுச்சின்னத்திலிருந்து சுமார் 50 மீற்றர் தொலைவில் மனித எலும்புகள் வெளிப்பட்டதாகவும் தெரியவருகிறது. (எ)



# சாய்ந்தமருது, மருதமுனையில் புனரமைக்கப்பட்ட வீதி திறப்பு

சாய்ந்தமருது, ஓக. 02

அம்பாறை, சாய்ந்தமருது பிரதேசத்தில் ஒஸ்மன் வீதிக்கு எதிர்ப்பக்கமாக அமைந்துள்ள புதிய வீதி மற்றும் மருதமுனை பிரதேசத்தில் ஸம் ஸம் வீதி 11 ஆம் குறுக்குத் தெரு என்பன கல்முனை மாநகர சபையால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

இவ்விரு வீதிகளும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கல்முனை மாநகர சபை ஆணையாளர் எம். றாபி தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவின் பங்குபற்றுதலுடன் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வுகளில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ.எம். ஆஷிக், கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளர் எம். அஸீம், உள்ளூராட்சி உத்தியோகத்தர் தாரிக் அலி சர்ஜூன் மற்றும் எம். றசீன் உள்ளிட்டோரும் பங்கேற்றனர். (எ)

# "நாட்டை இளைஞர்களுக்கான ஒரு நாடாக மாற்ற வேண்டும்"

மட்டக்களப்பு, ஓக. 02

இந்த நாட்டினை பொறுப்பேற்றுள்ள அரசாங்கமும் அநுர குமார திஸநாயக்கவும் இளைஞர்களை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளையும் அதற்கான திட்டங்களையும் வகுத்து எதிர்காலத்தில் இளைஞர்களின் கைகளில் நாட்டினை வழங்குவதற்கான செயல்பாடுகளை ஆரம்பித்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் ஒருங்கிணைப்பில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் முன்னெடுக்கப்படும் இளைஞர்களை இணைப்போம் வேலைத்திட்டத்தின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் புனித செபஸ்தியார் ஆலய மண்டபத்தில் கடந்த 30 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளைஞர்களே நாட்டினுடைய எதிர்காலம் உங்களிடம் தான் தங்கியிருக்கின்றது. ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் எண்ணக்கருவிலே உருவாக்கப்பட்ட விடயம் இளைஞர்களை ஒன்றாக திரட்டி அவர்கள் மூலமாக இந்த நாட்டை அவர்களுக்கான ஒரு நாடாக மாற்ற வேண்டும். இதனடிப்படையில் எங்களது அரசியல் செயல்பாடுகள் நாட்டின் அரசாங்கத்தினுடைய செயல்பாடுகள் முன்வைத்ததான வேலைத்திட்டங்களை செய்து வருகின்றோம்.

அந்த வகையில் இளைஞர்களை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளையும் அதற்கான திட்டங்களையும் வகுத்துக் கொண்டிருக்கின்றோம்- என்றார். (எ)

# தொலைத்தொடர்பு கோபுர பற்றரிகளுடன் இருவர் கைது

களுவாஞ்சிக்குடி, ஓக. 02



14 இலட்சம் ரூபாய் பெறுமதியான 44 தொலைத்தொடர்பு கோபுர பற்றரிகளுடன் இருவர் கைது கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி. கஜநாயக்கா தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்டுள்ள பற்றரி ஒன்றின் பெறுமதி சுமார் 30, 000 ரூபாய் என பொலிஸார் தெரிவித்தனர்.

பெரியபோரதீவு தொலைத்தொடர்பு கோபுரத்திலிருந்து திருடப்பட்ட 24 பற்றரிகளும் சம்மாந்துறை தொலைதொடர்பு கோபுரங்களிலிருந்து திருடப்பட்ட 20 பற்றரிகளுமே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கஞ்சாவுடன் இருவர் கைது சம்மாந்துறையில் சம்பவம்

சம்மாந்துறை, ஓக. 02


ஒரு தொகை கஞ்சாவை தம் வசம் வைத்திருந்த சந்தேக நபர்களை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம்சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நைனாகாடு பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

சம்மாந்துறை ஊழல் தடுப்புப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது மோட்டார் சைக்கிள் மூலம் கஞ்சாவை விற்பனை செய்வதற்காக வருகை தந்த இரு சந்தேக நபர்களை சம்மாந்துறை ஊழல் தடுப்புப் பிரிவினர் கைது செய்தனர்.

இவ்வாறு கைதானவர்கள் சென்னல் கிராமம் 02 பகுதியைச் சேர்ந்த 37, 52 வயதுடைய சந்தேக நபர்களாவர்.

இவ்வாறு கைதான சந்தேக



நபர்களிடமிருந்து 14 கிராம் 800 மில்லி கிராம், 57 கிராம் 900 மில்லி கிராம் கஞ்சா மற்றும் ஒரு தொகை பணம் மீட்கப்பட்டிருந்ததுடன் சந்தேக நபர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட சான்றுப் பொருட்களை சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் வழிகாட்டலில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். ஜெயலத்தின் நெறிப்படுத்தலில் பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி றிபாய்டீன் தலைமையிலான குழுவினர் இந்தக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு இந்திய நிறுவனங்கள் மீது அமெரிக்கா பொருளாதார தடை

வாஷிங்டன், ஓக. 02

**ஈரானிடம் பெற்றோலிய பொருட்களை வாங்கும் ஆறு இந்திய நிறுவனங்கள் மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்துள்ளது.**

அமெரிக்க வெளிவிவகாரத் துறை ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ள தாவது,

ஈரான் தனது சீர்குலைவு நடவடிக்கைகளுக்கு நிதி திரட்ட மத்திய கிழக்கில் தொடர்ந்து மோதலை தூண்டி வருகிறது. எனவே, பிற நாடுகளில் பயங்கரவாதத்தை வளர்க்கவும் சொந்த மக்களை நசுக்கவும் ஈரானுக்கு வருவாய் கிடைப்பதை தடுக்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்ளது.

அதாவது, ஈரானை சேர்ந்த பெற்றோலியம், பெற்றோலிய பொருட்கள் மற்றும் இரசாயன பொருட்களை கொள்முதல் செய்தல் உள்ளிட்ட வர்த்தகத்தில் ஈடுபடும் 20 சர்வதேச நிறுவனங்களுக்கு பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அந்த நிறுவனங்கள் இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம், துருக்கி, இந்தோனேஷியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவை.

இந்தியாவை சேர்ந்த காஞ்சன் பாலிமர்ஸ், ஆல்கெமிக்கல் சொல்யூசன்ஸ், ராம்னிக்லால் எஸ்.கொசாலியா அன் கோ, ஜூபிடர் டை கெம் பிரைவேட் லிமிடெட், குளோபல் இண்டஸ்ட்ரியல் கெமிக்கல் லிமிடெட், பெர்சிஸ்டன்ட் பெட்ரோகெம் பிரைவேட் லிமிடெட் ஆகிய 6 நிறுவனங்கள் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட நிறுவனங்களில் அடங்கும்.


அமெரிக்காவில் உள்ள அந்த நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன. ஈரான், அமைதிக்கு ஒப்புக்கொள்ளும்வரை, அணுஆயுத திட்டத்தை கைவிடும்வரை ஈரான் மீது அமெரிக்கா அழுத்தம் கொடுக்கும் - இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும், ஈரான் உயர் தலைவருடன் தொடர்புடைய 50இற்கும் மேற்பட்ட தனிநபர்கள் மீது அமெரிக்க நிதித்துறை பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

இதற்கிடையே, பிற நாடுகளிலிருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பாதி வேலைப்பாடு முடிந்த தாமிரம் மற்றும் தாமிர பொருட்கள் மீது 50 சதவீத வரியை அமெரிக்கா அறிவித்துள்ளது. நேற்று வெள்ளிக்கிழமை முதல் இது அமுலுக்கு வந்துள்ளது. இருப்பினும், மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில், இந்தியாவுக்கு பாதிப்பு குறைவாகவே இருக்கும் என்று ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர்.

ஏற்கனவே, வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்படாமல் இருப்பதால் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று ட்ரம்ப் அறிவித்திருந்த நிலையில், தற்போது இந்திய நிறுவனங்களை குறிவைத்து அமெரிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (எ)

# இந்தியாவில் ஹரப்பா காலத்து தொல்பொருட்கள் கண்டுபிடிப்பு



புதுடில்லி, ஓக. 02

இந்தியாவின் இராஜஸ்தான் மாநிலத்தின் வறண்ட பாலைவனத்தில் சிந்து சமவெளி தொடர்பான நாகரிகம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள ஆழமான பாலைவன பகுதியில் ஹரப்பா காலத்தின் தொல்பொருட்களும் கிடைத்துள்ளன. இந்த கண்டுபிடிப்பு, பண்டைய சிந்து சமவெளி நாகரிக எல்லைகளை மறுவடிவமைக்கும் முக்கிய தடயங்களை வெளிப்படுத்துவதாகக் கருதப்படுகிறது.

இது, இராஜஸ்தானின் ஆழமான பாலைவனத்திலும் சிந்து சமவெளியைப் போன்ற நாகரிக அடையாளம் இருப்பதற்கான முதல் சான்றாகும். மேலும் வடக்கு இராஜஸ்தானுக்கும் குஜராத்துக்கும் நடுவே உள்ள ஹரப்பா தளங்களுக்கு இடையேயான ஒரு முக்கிய இணைப்பாகவும் இது கருதப்படுகிறது. ஜெய்சால்மர் மாவட்டத்தில் உள்ள ராட்டாடி ரிதேரியில் சிந்து சமவெளி நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டது.

ராம்கர் தாலுகாவிலிருந்து கிட்டத்தட்ட 60 கிலோ மீற்றர் தொலைவிலும் பாகிஸ்தானின் சந்தனவாலாவிலிருந்து சுமார் 70 கிலோ மீற்றர் தொலைவிலும் உள்ள இது தொலைதூர பாலைவனமாகும். அங்கு ஹரப்பா காலத்திய எச்சங்களும் அதன் அடையாளமான சில தொல்பொருட்களும் காணப்பட்டுள்ளன. (எ)

# மியன்மாரில் இராணுவ அவசர நிலை நீக்கம்

## 6 மாதங்களுக்குள் தேர்தல்



நேபிடாவ், ஓக. 02

மியன்மாரில் இராணுவ அவசர நிலை நீக்கப்பட்டுள்ளது. இதேவேளை, 6 மாதங்களுக்குள் தேர்தல் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மியன்மாரில் ஆங் சான் சூகி தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால் தேர்தலில் மோசடி நடந்ததாக கூறி 2021ஆம் ஆண்டு அந்த அரசாங்கத்தைக் கலைத்து விட்டு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. இதனைத் தொடர்ந்து ஆங் சான் சூகி கைது செய்யப்பட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்தன.

அப்போது போராட்டக்காரர்கள் மீது இராணுவம் வன்முறையை கட்டவிழ்த்து விட்டது. போராட்டக்காரர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே ஏற்பட்ட இந்த மோதலில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். பல ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

எனவே, இராணுவ ஆட்சிக்கு எதிராக தொடர்ந்து ஆங்காங்கே மோதல்கள் அரங்கேறி வருகின்றன. இதனால் இராணுவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என ஐ. நா. சபை மற்றும் உலக நாடுகள் பலவும் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில் இராணுவ ஆட்சித்தலைவர் மின் ஆங் ஹ்லைங் செய்தியாளர்களை சந்தித்துப் பேசினார். அப்போது அவர் கூறுகையில், தேர்தலில் மோசடி நடைபெற்றதால் தான் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது. எனவே, நேர்மையான முறையில் தேர்தல் நடத்தி மக்களால் தெரிவு செய்யப்படும் தலைவரிடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்படும். இதனால், அடுத்த 6 மாதங்களுக்குள் பாராளுமன்றத் தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்காக 4 ஆண்டுகளாக உள்ள இராணுவ அவசர நிலை முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது - என்றார்.

இதற்கிடையே மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்ப்பு, அதிகாரிகளுக்கு அது தொடர்பான பயிற்சி போன்றவை தீவிரமாக நடைபெற்று வருகிறது. மேலும் இந்தத் தேர்தல் தொடர்பான வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்கும் புதிய சட்டம் ஒன்றையும் அரசாங்கம் இயற்றியுள்ளது.

# இந்திய பொருளாதாரம் செயலிழந்து விட்டது

## ட்ரம்ப் கூறியது உண்மைதான் - ராகுல் காந்தி



புதுடில்லி, ஓக. 02

இந்தியப் பொருளாதாரம் செயலிழந்துவிட்டதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடுமையான விமர்சனம் செய்த நிலையில் அது உண்மைதான் என்று மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி கூறியுள்ளார்.

அமெரிக்கா - இந்தியா இடையே குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வர்த்தக ஒப்பந்தம் எட்டப்படாததை யடுத்து, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்றும், அது நேற்று முதல் நடைமுறைக்கு வருவதாகவும் ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

மேலும், ரஷ்யாவிடமிருந்து இராணுவத் தளவாடங்கள். கச்சா எண்ணெய் வாங்குவதால் அபராதமும் விதிக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், இந்தியப் பொருளாதாரம் செயலிழந்துவிட்டது என்ற கடுமையான விமர்சனத்தை ட்ரம்ப் முன்வைத்துள்ளார். வரி விதிப்பை அறிவித்த சில மணி நேரங்களில் ட்ரம்ப் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த நிலையில், இந்தியப் பொருளாதாரம் செயலிழந்து போய்விட்டது என்று ட்ரம்ப் கூறிய கருத்து உண்மையானது தான் என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்திய பொருளாதாரம் செயலிழந்துவிட்டது என்பது பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரைத் தவிர நம் அனைவருக்கும் நன்றாகவே தெரியும். பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசு நாட்டின் பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் வெளிவிவகாரக் கொள்கைகளை முற்றிலும் அழித்துவிட்டது. இந்த உண்மையை ட்ரம்ப் கூறியதில் எனக்கு மகிழ்ச்சி. கோடீஸ்வரர் கௌதம் அதானிக்கு உதவுவதற்காக பா.ஜ.க. இந்தியப் பொருளாதாரத்தையே அழித்துவிட்டது.- என்றார். (எ)

# தென்கொரியா முன்னாள் ஜனாதிபதிக்கு பிடியாணை

சியோல், ஓக. 02

தென்கொரியாவில் முன்னாள் ஜனாதிபதிக்கு மீண்டும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



தென்கொரியாவின் ஜனாதிபதியாக இருந்த யூன் சுக் இயோல், கடந்த ஆண்டு அரசாங்கத்தைக் கவிழ்க்க எதிர்க்கட்சிகள் சதி செய்வதாக கூறி இராணுவ அவசர நிலையை அறிவித்தார். இதற்கு நாடு முழுவதும் எதிர்ப்புகள் கிளம்பின. எனவே, அவரை பதவி விலக கோரி இலட்சக்கணக்கான மக்கள் போராட்டத்தில் குதித்தனர்.

இதனையடுத்து அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். பின்னர் இராணுவ அவசர நிலையை செயல்படுத்தியதற்காக அரசமைப்பு நீதிமன்றில் அவருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டது. இந்த வழக்கில் யூன் சுக் இயோல் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

இதற்கிடையே தேர்தல் மோசடி தொடர்பான குற்றச்சாட்டுகளும் அவர் மீது சுமத்தப்பட்டன. இந்த வழக்கு விசாரணைக்கு முன்னிலையாகுமாறு நீதிமன்றம் பலமுறை உத்தரவிட்டது. ஆனால், அவர் ஆஜராகாததால் யூன் சுக் இயோலுக்கு மீண்டும் பிடியாணை பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# இம்ரான்கானின் ஆதரவாளர்கள் 166 பேருக்கு 10 ஆண்டுகள் சிறை

இஸ்லாமாபாத், ஓக. 02

இம்ரான்கானின் ஆதரவாளர்கள் 166 பேருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரும் தெஹ்ரீக் - இ - இன்ஸாப் கட்சித் தலைவருமான இம்ரான் கான், ஊழல் உள்ளிட்ட பல்வேறு வழக்குகளின் கீழ் கைது செய்யப்பட்டு, கடந்த 2023ஆம் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டார். இந்தச் சம்பவத்தின் போது, பஞ்சாப் மாகாணத்தில் அவரது ஆதரவாளர்கள் நடத்திய போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டது.

அப்போது, பாகிஸ்தானின் புலனாய்வுத் துறை அலுவலகம் உள்ளிட்ட ஏராளமான அரசு அலுவலகங்களும், இராணுவத் தளவாடங்களும் போராட்டக்காரர்களால் அடித்து தகர்க்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, இந்த வழக்கில் 185 பேர் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்ட நிலையில் 108 பேருக்கு, பைசலாபாத்திலுள்ள பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றம் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி

புளோரிடா, ஒக. 02


14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கு இந்திய தீவுகள் அணியை வீழ்த்தி பாகிஸ்தான் அணி திரில் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் ரி - 20 தொடர் நடைபெறுகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது போட்டி நேற்று முன்தினம் புளோரிடாவில் நடைபெற்றது.

முதலில் துடுப்பாட்டம் செய்த பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 178 ஓட்டங்கள் எடுத்தது. பாகிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக சைம் அயூப் 57 ஓட்டங்கள் எடுத்தார். மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் ஷமர் ஜோசப் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதையடுத்து 179 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 164 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் அதிகபட்சமாக ஜான்



சன் சார்லஸ், ஜுவெல் ஆண்ட்ரு தலா 35 ஓட்டங்கள் எடுத்தனர். பாகிஸ்தான் தரப்பில் முகமது நவாஸ் 3 விக்கெட்கள் வீழ்த்தினார். (எ)



# கனடா ஓபின் ரென்னிஸ் ஹோல்கர் ரூனே வெற்றி

றொரண்டோ, ஒக. 02

கனடா ஓபின் ரென்னிஸ் தொடரில் 4ஆவது சுற்றுக்கு ஹோல்கர் ரூனே முன்னேறினார்.

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இந்தத் தொடர் றொரண்டோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் டென்மார்க்கின் முன்னணி வீரரான ஹோல்கர் ரூனே, பிரான்ஸின் அலெக்ஸாண்ட்ரே முல்லர் உடன் மோதினார்.

அனுபவம் வாய்ந்த இரு வீரர்கள் மோதியதால் தொடக்கம் முதலே ஆட்டம் விறுவிறுப்பாக சென்றது. இறுதியில் அபாரமாக செயல்பட்டு ஆதிக்கம் செலுத்திய ஹோல்கர் ரூனே 6-2, 6-4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)



# கனடா ஓபின் ரென்னிஸ் ரைபகினா முன்னேற்றம்

றொரண்டோ, ஒக. 02

கனடா ஓபின் ரென்னிஸ் தொடரில் எலினா ரைபகினா 4ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள கனடா ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி அங்குள்ள றொரண்டோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் கஜகஸ்தானின் முன்னணி வீராங்கனையான எலினா ரைபகினா, ரொமானியாவின் ஜாக்குலின் கிறிஸ்டியன் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்டு ஆதிக்கம் செலுத்திய ரைபகினா 6-0, 7-6 (7-5) என்ற செற் கணக்கில் ஜாக்குலின் கிறிஸ்டியனை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட்:

# அவுஸ்திரேலியாவை வீழ்த்தி இறுதியில் தென்னாபிரிக்கா

பர்மிங்காம், ஒக. 02

லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் தொடரில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது தென்னாபிரிக்கா அணி.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது அரையிறுதி ஆட்டத்தில் தென்னாபிரிக்கா சம்பியன்ஸ் - அவுஸ்திரேலியா சம்பியன்ஸ் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பாட்டம் செய்த தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 186 ஓட்டங்கள் எடுத்தது.

தென்னாபிரிக்கா தரப்பில் வான் விக் 76 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலியா தரப்பில் சிடில் 4 விக்கெட்கள் வீழ்த்தினார். தொடர்ந்து 187 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 185 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதன் மூலம் ஓர் ஓட்டம் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா திரில் வெற்றி பெற்றது. அவுஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக கிறிஸ் லின் 35 ஓட்டங்கள் எடுத்தார். தென்னாபிரிக்கா தரப்பில் விஜோயன், பார்னெல் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. (எ)

# 6 விக்கெட் இழப்புக்கு இந்தியா 204 ஓட்டங்கள்

லண்டன், ஒக. 02

ஓவல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 204 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான கடைசி மற்றும் 5ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மழையால் பாதிக்கப்பட்டது.


லண்டன் கெனிங்டன் ஓவல் மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கிய இந்த டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு தொடக்கமே சற்று அதிர்ச்சியாக இருந்தது. யஷஸ்வி ஜெய்ஸ்வால் 9 பந்துகளில், 2 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கஸ் அட்கின்சன் பந்தில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து களமிறங்கிய சாய் சுதர்சன், கே.எல். ராகுலுடன் இணைந்து பொறுமையாக விளையாடினார். இந்த நிலையில்,

38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்த நிலையில் சுப்மன் கில் களமிறங்கினார். இந்திய அணி 23 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 72 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் மழை காரணமாக ஆட்டம் தடைப்பட்டது. தொடர்ந்து மதிய உணவு இடைவேளை வழங்கப்பட்டது. இதன் பின்னர் ஆடுகளம் ஈரப்பதமாக இருந்ததால் போட்டியை தொடங்குவதில் தாமதம் நிலவியது.

இந்தத் தொடரில் முதல் முறையாக விளையாடும் வாய்ப்பை பெற்ற துருவ் ஜூரெல் 19 ஓட்டங்களில் அட்கின்சன் பந்தில் ஆட்டமிழந்தார். முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 64 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 204 ஓட்டங்கள் எடுத்திருந்தது இந்தியா. கருண் நாயர் 52 ஓட்டங்களுடனும், வாஷிங்டன் சுந்தர் 19 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் தலைவர் சுப்மன் கில் 21 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். முன்னதாக அவர், 11 ஓட்டங்களை எடுத்திருந்த போது டெஸ்ட் தொடர்



ஒன்றில் அதிக ஓட்டங்கள் குவித்த இந்திய அணித் தலைவர் என்ற சாதனையை படைத்தார். இதற்கு முன்னர் அதிகபட்சமாக இந்திய அணியின் தலைவராக1978-79ஆம் ஆண்டு மேற்கு இந்திய

தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சுனில் கவாஸ்கர் 732 ஓட்டங்கள் குவித்திருந்தார். இந்த சாதனையை தற்போது சுப்மன் கில் முறியடித்து புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார். நடப்பு இங்கிலாந்து தொடரில் சுப்மன் கில் இதுவரை 743 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்கு எதிராக நேற்று முன்தினம் தொடங்கிய 5ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் தலைவர் சுப்மன் கில் நாணயச்சுழற்சியில் தோல்வியடைந்தார். இந்தத் தொடர் முழுவதுமே சுப்மன் கில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெறவில்லை. 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஓர் அணி அனைத்து ஆட்டங்களிலும் நாணயச்சுழற்சியை இழப்பது இது 14ஆவது முறையாகும். இதில் 13 தொடர்களில் 3 தொடர்கள் சமநிலையில் முடிவடைந்திருந்தன. 1953ஆம் ஆண்டு சொந்த மண்ணில் நடைபெற்ற ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அனைத்து ஆட்டங்களிலும் நாணயச்சுழற்சியை இழந்த போதிலும் தொடரை வென்று அசத்தியது. (எ)

# முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து 307 ஓட்டங்கள்

புலவாயோ, ஒக. 02

சிம்பாவே அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி 307 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தது. புலவாயோ நகரில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் சிம்பாவே அணி முதல் இன்னிங்ஸில் 60.3 ஓவர்களில் 149 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக கிரெய்க் இர்வின் 39, தபட்ஸ்வா சிகா 30, நிக் வெல்ச் 27 ஓட்டங்கள் சேர்த்தனர். நியூசிலாந்து அணி சார்பில் மேட் ஹன்றி 6, நேதன் ஸ்மித் 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

இதையடுத்து விளையாடிய நியூசிலாந்து அணி முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் 26 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 90 ஓட்டங்கள் எடுத்திருந்தது. நேற்று முன்தினம் 2ஆவது நாள் ஆட்டத்தை நியூசிலாந்து அணி தொடர்ந்து விளையாடியது. வில் யங் மேற்கொண்டு ஓட்டங்கள் சேர்க்காத நிலையில் முசாராபனி பந்தில் ஆட்டமிழந்தார்.

முடிவில் 96.1 ஓவர்களில் 307 ஓட்டங்கள் சேர்த்து [illegible] அணி



தரப்பில் பிளெஸ்ஸிங் முசாராபானி 3, தனகா ஷிவாங்கா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

158 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை விளையாடத் தொடங்கிய சிம்பாவே அணி 13 ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 31 ஓட்டங்கள் எடுத்திருந்தது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியாலை...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் காணாமற்போனோர் அலுவலக அதிகாரிகளுடனும் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திகளுக்குமான நிலையத்தின் பிரதிநிதிகளுடனும் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ)

## விரும்பிய...

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிராந்தியத்தில் உள்ள போட்டியாளர்களைப் போன்ற ஒரு கட்டண விகிதத்தை அடைவதே இந்தப் பேச்சுவார்த்தைகளின் முக்கிய நோக்கமாகும்.

பல்வேறு துறைகளில் இலங்கையின் சந்தைப் பங்கைப் பராமரிக்க இது அவசியமானது.

பேச்சுவார்த்தைகளின் வெற்றி காரணமாக, எதிர்காலத்தில் மேலும் பல வர்த்தக பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் - என்றார். (அ)

## அரியாலை சான்று

அரியாலை புதைகுழிகளில் இருந்து இதுவரை புத்தகப் பை , சிறுவர்களின் காலணிகள் , குழந்தையின் பால் போச்சி, வளையல்கள் உள்ளிட்ட 54 சான்று பொருட்கள் மீட்கப்பட்டு அவை நீதிமன்ற கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

அவற்றினைப் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தி , அவற்றை அடையாளப்படுத்தக் கூடியவர்கள் நீதிமன்றுக்கோ , குற்ற புலனாய்வுத் துறையினருக்கோ தெரிவிப்பதன் ஊடாக விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அதேவேளை சான்றுப் பொருட்களை பார்வையிட வருவோருக்கான கட்டுப்பாடுகள், நடைமுறைகள் தொடர்பில் இன்று சனிக்கிழமை அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சர்வதேச...

அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானப்பகுதியில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழியின் அகழ்வு நடவடிக்கைகளை பார்வையிடுவதற்காக நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் அடிப்படையில்,நேற்றையதினம் குறித்த பகுதியை நேரிற் சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது-

*1995 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரையும் முழுக்க முழுக்க இராணுவ முகாமாகவும், இராணுவக் கட்டுப்பாட்டு வலயமாகவும் கையகப்படுத்தப்பட்டிருந்த செம்மணிப் பகுதியில் இனங்காணப்படும் மனித என்புத் தொகுதிகள் சாதாரணமாக புதைக்கப்பட்டவை தான் என்று கூற முற்படுவது மிக அபத்தமானது.*

இந்துக்களின் சடங்குமுறையில் உடலங்களை கூட்டாக அடக்கம் செய்வதோ, ஆடைகளற்று அடக்கம் செய்வதோ பின்பற்றப்படுவதில்லை. அவ்வாறிருக்க ஒரு இனத்தின் பலதசாப்தகாலப் போராட்டத்துக்கான சாட்சியமாக அணுகத்தக்க முக்கியத்துவம் மிக்க விடயமொன்றை மடைமாற்றும் செயற்பாடுகளில் சிலர் ஈடுபடுகிறார்கள்.

அத்தகைய அரச ஒத்தோடிகளின் செயற்பாடுகளைக் கடந்து, செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வுப்பணிகள் முழுமையாக நடைபெற்று உண்மைகள் கண்டறியப்படுவதற்காக, சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் கவனத்தைக் கோரும் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வோம் - என்றார். (அ)

# பூர்வீக நிலத்தை பாதுகாப்பதற்காக பொங்கி எழும் மன்னார் இளையோர்

## விழிப்புணர்வுப் போராட்டத்துக்கு அழைப்பு

மன்னார், ஓக. 02

பல்தேசிய கம்பனிகளின் கனியவளச் சுரண்டலால் பாதிக்கப்படும் மன்னார் மாவட்டத்தின் மக்கள் இருப்பையும் பூர்வீக நிலத்ததையும் பாதுகாக்க

மன்னார் மாவட்ட இளையோர் ஒன்றிணைந்து எதிர்வரும் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் அடையாள விழிப்புணர்வுப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க ஏற்பாடு செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடக சந்திப்பொன்றை முன்னெடுத்த குறித்த ஏற்பாட்டுக் குழுவினர் இது குறித்து மேலும் கூறுகையில்-

மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களில் ஒன்றாக மணல் இருக்கின்றது. இந்த மணல் விசேடமக இல்மனைற் கனிமத்தை கொண்டதாக இருப்பதனால் அதற்கு உலகளவில் பரந்துபட்ட கேள்வி இருந்து வருகின்றது.

இந்நிலையில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ஆஸ்திரேலிய பல்தேசி நிறுவனம் ஒன்று குறித்த இல்மனைற் மணலை அகழ்ந்து எடுக்க முயற்சித்து வருகின்றது.

அனாலும் அதற்காக அனுமதிகள் இழுபறியில் இருந்து வந்த நிலையில் இந்த அரசாங்கத்தினால் அது வழங்கப்படுவதற்கான சூழல் உருவாகியுள்ளது.

குறிப்பாக ஆஸ்திரேலிய நிறுவனம் அகழ்வுக்கான சூழலியல் ஆய்வு அறிக்கைக்காக சுற்றுச்சூழல் அதிகாரசபையிடம் விண்ணபித்திருந்த நிலையில் அந்த நிறுவனம் ஆய்வு செய்து சாதகமான அறிக்கை வழங்கியுள்ளது.

இதையடுத்து நிறுவனமான பல்தேசிய நிறுவனங்களுக்கு மணலை அகழ்வதற்கான அனுமதி வழங்கப்படும் ஏது நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு பல்தேசிய நிறுவனங்கள் மன்னாரின் இல்மனைற் மணலை அகழ்ந்தெடுத்தால் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் மன்னாரின் மக்கள் வாழ் நிலங்களுக்குள் கடல் நீர் உட்புகுந்து மக்களில் இருப்பையும் கருவறுத்துச் சென்றுவிடும் நிலை உருவாகும்.

இந்த அழிவை தடுப்பதற்கும் எமது பூர்வீக நிலத்தையும் மக்கள் இருப்பையும் பாதுகாக்கவே கரு, நில பாதுகாப்பு என்ற கருப்பொருளுடன் மக்களை விழிப்புணர்வு செய்ய போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து இளையோராகிய நாம் வீதிக்கு இறங்கவுள்ளோம்.

எமது இந்த போராட்டத்துக்கு மன்னார் மாவட்ட மக்கள் குறிப்பாக இளைஞர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அழைப்பு விடுக்கின்றோம் - என்றனர். (அ-05)

## ஜெனிவாவுக்கு...

கொள்கையளவில் சகலரும் கையொப்பமிட்டுள்ளதால் அவற்றை பலப்படுத்தும் வகையிலான திருத்தங்களை மேற்கொள்வதற்கு மாத்திரம் இணங்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஜெனிவா அமர்வில், பொறுப்புக்கூறல் தொடர்பில் முன்வைக்கப்படவுள்ள புதிய தீர்மானத்தை பலப்படுத்தும் வகையில், மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு அழைப்பு விடுத்த போதும் அவர்கள் கலந்துகொள்ளவில்லை.

இந்த நிலையில், தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும், இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்றிருந்தது.

இதன்போது, தமிழ் தேசிய பேரவை சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன் ஆகியோரும் இலங்கை தமிழரசுக்கட்சி சார்பாக சுமந்திரன், எஸ்.சத்தியலிங்கம், இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோரும் சிவில் சமூகம் சார்பாக கலாநிதி குமாரவடிவேல் குருபரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் கூட்டம் நாளை யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் போது, அதில் கடிதம் தொடர்பில் ஆராயப்பட்டு, அக்கூட்டம் நிறைவடையும்போது, அது தொடர்பான தீர்மானத்தை அறிவிப்பதாக தெரிவித்துள்ளது.

கடிதத்தில் கையொப்பமிடுவதற்கு இணங்குவதாயின் அது தொடர்பில் இன்று மாலை தமிழ் தேசிய மக்கள் முன்னணியையும் சிவில் சமூக அமைப்புகளையும் சந்தித்து தீர்மானத்தை அறிவிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, ஏற்கனவே இறுதி செய்யப்பட்டுள்ள கடிதத்தின் பொருளை மாற்றாமல், அவற்றை பலப்படுத்தும் வகையிலான திருத்தங்களை மேற்கொள்வதற்கான தீர்மானத்தை பரிசீலிக்க தயாராக இருப்பதாக இலங்கை தமிழரசுக் கட்சிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

எனினும், அவற்றில் உள்ள அம்சங்களை அகற்றுவதற்கு உடன்படவில்லை எனவும், நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு பின்னர் கடிதத்தை வெளியிடுவதை தாமதிக்க முடியாது என்பதை எடுத்துக் கூறியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(அ)

# செம்மணி மயானத்துக்கு அருகில் விபத்தில் சிக்கிய நபர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 02

யாழ். செம்மணி மயானத்திற்கு அண்மையில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நபர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். மீசாலை கிழக்கு மீசாலை பகுதியை சேர்ந்த கோபாலகிருஷ்ணசாமி லிங்கேஸ்வரன் (வயது 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

இவர் கடந்த 28ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வந்துகொண்டிருந்தார்.

இதன்போது செம்மணி மயானத்திற்கு அருகாமையில் வீதியால் சென்ற துவிச்சக்கர வண்டியை முந்துவதற்கு முயற்சித்தவேளை துவிச்சக்கர வண்டியுடன் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இந்நிலையில் படுகாயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ப்பிக்கப்பட்டனர். துவிச்சக்கர வண்டியில் சென்றவர் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளார். இருப்பினும் குறித்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்றிரவு உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (05)

## சித்துப்பாத்தி...

தொகுதிகளில் 07 முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் கடந்த 12 நாட்களாக முன்னெடுக்கப்பட்டு அகழ்வு பணியில் 47 எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அரியாலை பகுதியில் “தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01” மற்றும் “தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02” என நீதிமன்றினால் அடையாளப்படுத்தப்பட்ட மனித புதைகுழிகளில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்ட பணிகளுக்காக 45 நாட்கள் நீதிமன்றினால் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்றைய தினம் 27 ஆவது நாளாக முன்னெடுக்கப் பட்டது.

இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் பகுதி கடந்த 12 ஆவது நாட்களாக முன்னெடுக்கப்படும் நிலையில் இன்றைய தினம் புதன்கிழமை வரையில் 47 எலும்புக் கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனித புதைகுழியில் அகழ்வு பணிகள் இதுவரை கட்டம் கட்டமாக 36 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன் போது, நேற்றைய தினம் அகழ்ந்து எடுக்கப்பட்ட 07 எலும்பு கூட்டு தொகுதியுடனுமாக 112 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை 122 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சஜித்தும்...

இது தொடர்பில் அவர் பதிவிட்டுள்ள எக்ஸ் பதிவில் -

இது இலங்கையை வியட்நாம் மற்றும் பங்களாதேஷுடன் இணைக்கிறது என்றும், அதே நேரத்தில் இந்தியா 25 வீத வரியை செலுத்துகிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், நமது ஏற்றுமதியாளர்களுக்கு உண்மையான ஊக்கத்தை அளிக்க வரியை 1 வீதமாகக் குறைப்பதை இலங்கை நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட் டார்.(அ)

## அமெரிக்க....

இலங்கைப் பொருட்களுக்கு அமெரிக்கா விதித்த வரி விகிதத்தை 20 வீதமாகக் குறைப்பது ஒரு வெற்றியாகும்.

மேலும் நமது ஏற்றுமதியின் பிராந்திய போட்டித்தன்மையை மேலும் பராமரிக்க இது உதவும்.

இதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இதற்காக (திரைக்கு முன்னும் பின்னும்) கடுமையாக உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒரு சிறிய நாடாக நாம் எதிர் கொள்ளும் சவால்களைப் புரிந்து கொண்டு அந்த நிவாரணத்தை வழங்கிய அமெரிக்காவிற்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

இதுபோன்ற சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு, இலங்கையில் வர்த்தகத் தடைகளைத் தளர்த்தி, இலங்கையை உலகத்துடன் ஒருங்கிணைப்பதன் மூலம், நாம் இன்னும் பல சாதனைகளை அடைய முடியும் என்பதை நான் வலியுறுத்துகிறேன் - என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## பாதுகாப்பு பிரதி அமைச்சரை பிரான்ஸ் தூதுவர் சந்தித்தார்!



கொழும்பு, ஒக. 02

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவை இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ரெமி லம்பேர்ட் நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது, பிரதி அமைச்சரும் பிரெஞ்சு தூதுவரும் பரஸ்பர ஆர்வமுள்ள விசயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

இரு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் மற்றும் கடல்சார் பாதுகாப்பு மற்றும் திறன் மேம்பாடு ஆகிய துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை ஆராய்தல் தொடர்பிலும் கலந்துரையாடினர்.

இலங்கையுடனான பிரான்ஸின் நீடித்த ஒத்துழைப்புக்கு பிரதி அமைச்சர் பாராட்டு தெரிவித்ததுடன், குறிப்பாக ரத்மலானையில் உள்ள சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள கடல்சார் ஆய்வுகளுக்கான பிராந்திய நிலையத்துக்கு வழங்கப்பட்ட குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை எடுத்துக்காட்டினார்.

தற்போதைய பிராந்திய பாதுகாப்பு முன்னேற்றங்கள் குறித்து கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும், எதிர்கால இருதரப்பு ஒத்துழைப்புக்கான விடயங்களை ஆராயவும் இந்த சந்திப்பு ஒரு பயனுள்ள தளமாக செயல்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முன்னணி நிறுவனத்தின் 3 கிளைகளுக்கு அபராதம்

கொழும்பு, ஒக. 02

காலாவதியான பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் முன்னணி பல்பொருள் அங்காடி விற்பனையகத்தின் மூன்று கிளைகளுக்கு எதிராக நீதிமன்றம் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையால் தாக்கல் செய்யப்பட்ட தனித்தனி வழக்குகளில் அந்தக் கிளைகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் தலா 2 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தின் அறை 5 நீதிபதி உத்தரவிட்டார்.

குறித்த அங்காடியின் கிளைகளில் காலாவதியான ஜெல்லி, மெந்தோல், பிஸ்கெட்கள் என்பவை விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் 7 அதிகாரிகள்மீது நடவடிக்கை!

கொழும்பு, ஒக. 02

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் 7 அதிகாரிகள் விமான நிலையத்தில் உள்ள தீர்வையற்ற அங்காடிகளிலிருந்து 30இற்கும் மேற்பட்ட மதுபான போத்தல்களை கொள்வனவு செய்தமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பல சந்தர்ப்பங்களில் அவர்கள் இவ்வாறு மதுபான போத்தல்களை எடுத்துச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இந்த அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் இடமாற்றமும் செய்யப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் குறித்த அதிகாரிகளுக்கு எதிராகச் சிறப்பு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இலங்கை விவகாரத்தில் புதிய யோசனைக்கு முடிவு

### இணை அனுசரணை நாடுகள் முன்மொழியும்

ஜெனிவா, ஒக. 02

**ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பான முக்கிய குழுவின் நாடுகள் பேரவையின் அடுத்த கூட்டத்தொடரில் புதிய யோசனையை முன்மொழியவுள்ளன.கனடா, மலாவி, மொண்டினீக்ரோ மற்றும் வடக்கு மெசிடோனியா ஆகிய நாடுகள் இணைந்து இந்த யோசனையை முன்மொழியவுள்ளன.**

இந்த யோசனை கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விடவும் மாறுபட்ட வகையில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய அரசாங்கம் இலங்கை தொடர்பான தீர்மானத்தை நிராகரித்துள்ள போதிலும், இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் உள்ளிட்டவற்றை வலியுறுத்தி 51/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன், 46/ 1 தீர்மானத்தையும், 51/1 தீர்மானத்தையும் இலங்கை நிராகரித்துள்ள நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனையின் ஊடாக வெளிப்புற ஆதாரங்களை சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

இதேநேரம், அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட அரசாங்கத்தின் தரப்பினருடன் கலந்துரையாடியிருந்தார். அவரும் தமது அறிக்கையை அடுத்த வாரம் சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, அரியாலை - சித்துப்பாத்தி மனித புதைகுழியும் அகழ்ந்தெடுக்கப்படுகிறது. இது இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றமைக்கான சாட்சியென தமிழ் தேசிய பரப்பில் இயங்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் சிவில் செயல்பாட்டாளர்களும் கூறுகின்றனர்.

இந்த பின்னணியில் இலங்கை தொடர்பான புதிய முன்மொழிவை பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் முன்வைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் 8ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 3ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

அர்ச்சுனாவுக்கு எதிரான வழக்கு

## ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்கு காலவகாசம்!

கொழும்பு, ஒக. 02

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் உறுப்புரிமையை இரத்து செய்யுமாறு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

இந்த மனு, நேற்று வெள்ளிக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான மாயாதுன்ன கொரயா, மஹேன் கொபல்லவ ஆகியோர் அடங்கிய ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரதிவாதியான இராமநாதன் அர்ச்சுனா சார்பில் முன்னிலையான சட்டத்தரணி செனானி தயாரத்ன, இந்த மனு மீதான ஆட்சேபனைகளை தாக்கல் செய்யக் கால அவகாசம் வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

அவகாசம் வழங்கியது. அத்துடன், ஏதேனும் ஆட்சே பனைகள் இருந்தால் இரண்டு வாரங்களுக்குள் தாக்கல் செய்யுமாறு மனுதாரருக்கு அறிவித்தது.

இராமேஸ்வரம் - மன்னார் கப்பல் சேவை:

## இந்திய மத்திய அரசின் அனுமதி கிடைத்ததும் ஆரம்பிக்கப்படும்!

கொழும்பு, ஒக. 02

இந்திய மத்திய அரசின் அனுமதி கிடைத்ததன் பின்னர் இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படும் என்று தமிழ்நாட்டின் பொதுப்பணித்துறை அமைச்சர் ஏ.வ.வேலு தெரிவித்தார்.

இராமேஸ்வரத்தில் புதிய துறைமுக அலுவலகம் ஒன்றை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துக்கொண்டு ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்படி,

118 கோடி இந்திய ரூபாய் செலவில், இராமேஸ்வரம் முதல் இலங்கையின் தலைமன்னார் வரையிலான பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசின் அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் குறித்த சேவை ஆரம்பிக்கப்படும் - என்றும் அவர் இதன்போது மேலும் கூறினார். (ஐ)

# மாங்குளத்தில் விவசாய முதலீட்டு வலயம் ஐ. நாவின் உதவியில் கட்டியெழுப்ப திட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 02

மாங்குளம் முதலீட்டு வலயத்தை விவசாய முதலீட்டு வலயமாக ஐ. நா.வின் தொழில் மேம்பாட்டு நிறுவனத்தின் (யுனிடோ) உதவியுடன் கட்டி யெழுப்புவது தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், பெருந்தோட்டைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன, கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வளங்கள் இ.சந்திர சேகர் ஆகியோரின் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

“வடக்கு மாகாணத்தை - வன்னிப் பிராந்தியத்தை ஒரு துடிப்பான உற்பத்தி மற்றும் பெறுமதிசேர் மையமாக புத்துயிர் பெறச் செய்வதே எங்களுடைய நோக்கம். வடக்கில் இலங்கை முதலீட்டு சபையால் 3 முதலீட்டு வலயங்கள் அடையாளப்படுத் தப்பட்டுள்ளன. அதில் மாங்குளம் முதலீட்டு வலயத்தை விவசாய முதலீட்டு வலயமாக கட்டி யெழுப்புவதன் ஊடாக நிலையான வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் பிராந்திய செழிப்பையும் ஏற்படுத்த முடியும்.

“இந்த முதலீட்டு வலயம் கணிசமான நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை உருவாக்கும். விவசாயம் மற்றும் கடற்றொழில் சார்ந்த பெறுமதிசேர் உற்பத்திகளை ஊக்குவிப்பதன் மூலமும், சுற்றுச்சூழல் நட்பு முதலீட்டை ஈர்ப்பதன் மூலமும், இந்த முதலீட்டு வலயம் தேசிய பொருளாதாரத்துக்கு வடக்கின் பங்களிப்பை உயர்த்தும்.

“முதல் கட்டத்தைத் தொடங்கவும், அமைச்சுகளை ஒருங்கிணைக்கவும், விவசாய உற்பத்திகளை பதப்படுத்துதல் மற்றும் பெறுமதிசேர் உற்பத்திகளாக மாற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தவும் உதவிகளை மேற்கொள்ளுமாறு பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சரை கேட்டுக்கொள்கிறேன் என்று வடக்கு ஆளுநர் கூறினார்.

தொடர்ந்தும் கருத்துரைத்த அவர், “உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பொருத்தமான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு மாங்குளத்தை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான ஆதரவை முதலீட்டு சபையிடம் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

தொழில்துறை திறன் மேம்பாடு, உணவு பாதுகாப்பு தரநிலைகள் மற்றும் நிலையான உற்பத்தியில் யுனிடோவின் வழிகாட்டுதல் மிகவும் முக்கியமானது, அதேபோல் நிறுவனங்களை உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளுடன் இணைப்பதில் ஆதரவும் முக்கியமானது.

இந்தத் திட்டம் வெறும் ஒரு தொழில்துறை முதலீட்டு வலயம் அல்ல - இது வடக்குக்கான மீள்தன்மை, நம்பிக்கை மற்றும் புதுப்பித்தலின் சின்னமாகும். ஒன்றாக, இந்த தொலைநோக்கை நடைமுறையில் கொண்டுவருவதற்கு ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றும் கூறினார்.

இதைத் தொடர்ந்து, யுனிடோ நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதியால், மாங்குளம் முதலீட்டு வலயத்தை எப்படி மேம்படுத்துவது என்பது தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org